மிக்கேலா கரோசினோ

# அலோசியஸ் குவனெல்லா

## மானிடத்தை நலன்களால் நிரப்பியவர்



Tamil Text

| | | |
|---|---|---|
| மூலநூல் | : | Aloysius Guanella<br>*He went about doing good* |
| நூலாசிரியர் | : | Sr. Michela Carrozzino, Dsmp |
| மொழியாக்கம் | : | Mr. G. Christopher, M.A., Ph. D.,<br>Mr. C. Arockiam, M.A., M.Ed.,<br>Mr. G. Savarimuthu, M.A., M.Ed., |
| மேற்பார்வை | : | Sr. I. Annammal, Dsmp<br>Fr. A. John Bosco, Sdc |
| வெளியீடு | : | Centro Studi Guanelliani<br>Roma |
| பதிப்பகம் | : | Patrik Print System, Cuddalore.<br>04142-294141 |
| பதிப்பு | : | September 8, 2011 |

# அறிமுகம்

புனிதரான அலோசியஸ் குவனெல்லா அடிகளார் (1842-1915) கன்னியர்களுக்கான "இறை பராமரிப்பு மரியன்னை மகளிர் சபை" (Daughters of St. Mary of Providence) குருக்களுக்கான "அன்பின் பணியாளர் சபை" (Servants of Charity) ஆகிய இரு துறவற சபைகளை நிறுவினார். மேலும் பொது நிலையினருக்காக, "குவனெலிய உடன் ஒத்துழைப்பாளர்கள்" (Guanellian Co-operators) என்ற அமைப்பையும் உருவாக்கினார். பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இத்தாலியில் நடந்த தொழில் மயமாக்கலின் காரணமாக ஏற்பட்ட சமூக மாற்றத்தினால் பாதிக்கப்பட்டு வறுமையிலும், பசியிலும், நோயிலும் வாடிய மக்களின் துயர் துடைக்க அன்றைய குருக்களில் பலர் தங்களது பணியினைப் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்கான அர்ப்பணித்தனர். அவ்வாறு தங்களை அர்ப்பணித்தவர்களில் தந்தை குவனெல்லா மிகவும் முக்கியமானவர் ஆவார். "தான் வாழ்ந்த காலத்தில் நடந்தேறிய சமூக மாற்றங்களை மிகவும் ஆழமாக உணர்ந்து, அதில் தன்னையே முழுமையாய் ஈடுபடுத்தி, மிகவும் அமைதியாக ஆரவாரமின்றி ஏழைகளுக்கு முழுமையாக அர்ப்பணித்தார்" தந்தை குவனெல்லா (A. Monticone, *Don Guanella e Roma,9*).

1912- ல்
தந்தை குவனெல்லா.



தங்களது அடிப்படை தேவைகளான உணவு, உடை, இருக்க இடம் இல்லாத விவசாயிகள், கையில் காசின்றி, காலில் காலணி கூட இல்லாத தொழிலாளிகள், பள்ளிச் செல்ல இயலாத குழந்தைகள், ஏமாற்றமும், ஏக்கமும் மிஞ்சிய பெற்றோர்கள், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட இளைஞர்கள் ஆகியவர்களைப் பார்க்கும் போதெல்லாம் தந்தையின் உள்ளம் மெழுகாய் உருகியது. (*Opere*, I, 302)

நிறுவனர் போன்றே சபையினரும் பேரழிவுகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுகின்றனர்.

இந்தியாவில் 2004, டிசம்பரில் ஏற்பட்ட சுனாமியின் போது உதவி.



"அலோசியஸ் குவனெல்லா" என்றாலே மனிதநேயர் என்று பொருள் கொள்ளும் அளவுக்கு வாழ்ந்தார். சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களும், தமக்கென்று யாருமே இல்லை என்று வாடிய மக்களும் குவனெல்லாவை தங்கள் மத்தியில் கண்டு ஆறுதல் பெற்றனர். இவர்களில் பலரை தம் இல்லத்தில் வரவேற்று பராமரித்தார். மனிதர்கள் இறைவன் மீது விசுவாசமுள்ளவர்கள், இல்லா-தவர்கள் என யாராக இருப்பினும் எவ்வித வேறுபாடுமின்றி அன்பு காட்டினார் தந்தை குவனெல்லா. தம் மட்டற்ற இரக்கத்தினால் அவர் இயேசுவின் நற்செய்திக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகவும், சரியாகச் சொன்னால் ஒரு நடமாடும் நற்செய்தியாகவே விளங்கினார். இறைவன் தம் மக்களைத் தொடர்ந்து அன்பு செய்கிறார் என்பதை மக்கள் உணரச்செய்தார்.



அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குவனெல்லிய சகோதரிகள்.



தந்தை குவனெல்லா உள்ளத்தை என்றும் கவர்ந்த ரெட்டிக்கே ஆல்ப்ஸ் மலையின் ஒரு தொடர்ச்சி.

அலோசியஸ் குவனெல்லா பிறந்த 1842-ம் ஆண்டு மிகவும் முக்கியமான ஆண்டாகும். அன்றைய அரசியல் நிகழ்வுகளும், ஏனைய மாற்றங்களும் அப்போது வாழ்ந்த மக்களிடமும், குருக்களிடமும் நல்ல மாற்றத்தையும் பக்குவத்தையும் ஏற்படுத்தியது.

16-ம் கிரகோரியார் (Gregory XVI) திருத்தந்தையாக இருந்த போது தான் (1831-1846) அலோசியஸ் குவனெல்லா பிறந்தார். இவர் காலத்தில் திருச்சபை மிகவும் உன்னதமான நிலையிலும், வழுவாவரம் பெற்ற அதே நேரத்தில் அதிகாரம் கொண்டதாகவும் இருந்தது. திருச்சபையின் சுதந்திரமான போக்கு கண்டிக்கத்தக்கதாகவும் இருந்தது. குவனெல்லா தாம் பிறந்த காலத்தை மிகவும் உன்னதமாகக் கருதினார். இந்தக் காலகட்டத்தில் வேதபோதக செயல்பாடுகள் குறிப்பிடும் அளவிற்கு நல்ல பலன்களைத் தந்தன. அவ்வாறே குவனெல்லா சபையாரின் முதல் இறைப்பணி ஆரம்பமான அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (1913) அன்புப்பணி சிறப்பாக அமைந்தது. இதற்கெல்லாம் காரணம் அப்போதைய திருத்தந்தையின் ஆதரவேயாகும்.

1831–1846 வரை திருத்தந்தையாய் இருந்த 16–ம் கிரகோரி பிறந்த ஊர் பெல்லுநோ, நாள் செப்டம்பர் 18, 1765.



தந்தை குவனெல்லா தம் சபை கன்னியர்களை மறைபரப்பு பணிக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு



1908-ல் துறவற வார்த்தைப்பாடு எடுத்த அன்பின் பணியாளர் சபையினர்.

அனுப்புவதற்கு முன், தான் அங்குச் சென்று சிக்காகோவில் (Chicago) இருந்த "ஸ்கலபிரியன் சபை" (Scalabrinian) குருக்கள் தங்களை ஏற்று வரவேற்பார்களா? என்பதை உறுதி செய்து கொண்டார். 1842-ம் ஆண்டு விவசாயத்திற்கு இரசாயண உரங்களைப் பயன்படுத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விளைவாக விவசாய உற்பத்திப் பன்மடங்குப் பெருகி ஒரு சமுதாய மாற்றத்தை உருவாக்கியது.

தந்தை குவனெல்லா இத்துறையில் மிகுந்த ஆர்வம் காட்டினார். அவர் சதுப்பு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி, அங்கு புதிய கண்டுப்பிடிப்புகளையும், செய்முறைகளையும் பயன்படுத்தி, விவசாய குடியிருப்புகளை உண்டாக்கினார். மேலும் நவீன விவசாய முறைகளைப்பற்றி மக்களிடம் எடுத்துரைப்பதுடன், இளைஞர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக்களுக்கான திட்டங்களையும் உருவாக்கினார். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் சோந்திரியோ (Sondrio) மாவட்டத்தில் அவர் உருவாக்கிய ஒலோனியோ (Olonio S. Salvatore) என்ற கிராமம் ஆகும்.

அப்போது எடுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் சமுதாயத்தில் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை வெளிப்படுத்தியது.



தந்தை குவனெல்லா உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய புனித ஜோசப் பெனடிக்ட் கொத்தலெங்கோவின் உருவச்சிலை.

இதை உணர்ந்த தந்தை குவனெல்லா வறுமையுற்ற மக்களுக்கு உறைவிடமும், உணவும் இறைவன் மூலம் ஆறுதலும் கொடுப்பதற்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்தார். பசியோடு இருப்பவர்களுக்குப் பக்தியை போதிக்க இயலாது என்பதை நன்கு உணர்ந்திருந்தார். இவ்வாறாக தந்தை குவனெல்லாவின் அன்புப்பணி, இறைத்தந்தையின் மீது கொண்ட அளவில்லா அன்பினாலும், "நீதியின் ஒளியான" இயேசுவின் சாயலிலும், இறைபராமரிப்பு அன்னையின் பாதுகாவலிலும் தொடங்கலாயிற்று.



புனித ஜான் போஸ்கோ.

ஜோசப் பெனடிக் கொத்தலெங்கோ (Giuseppe Benedetto Cottolengo) 1842 ஏப்ரல் 30-ல் இறந்தார். அதே ஆண்டில் தந்தை அலோசியஸ் ஆண்டோனியோ குவனெல்லா பிறந்தது உலகிற்கு ஆறுதல் அளிப்பது போல் இருந்தது. இந்நிகழ்வு ஒரே ஆண்டில் சூரியனின் மறைவும், உதயமும் இருந்தது போல் அமைந்தது. அதே ஆண்டில் ஏழ்மைமிகு தூரின் நகருக்கு புதிய குருவாக தந்தை ஜான் போஸ்கோ வருகை தந்து தந்தை கொத்தலெங்கோவை சந்தித்தார். இம்மூன்று புனித குருக்களும் லூயிஜி ஓரியோனே (Luigi Orione) அன்னிபெல்லே தி பிரான்ஸ் (Annibale di Francia) ஆகியோருடன் இணைந்து முன்னோரின் கூற்றை உண்மையாக்கினார்கள். என்னவென்றால் "உலகம் வட்ட வடிவமானது. இவ்வட்டத்தின் மையம் தான் இறைவன். அதிலுள்ள ஆரங்கள் மனிதர்களின் பல தரப்பட்ட வாழ்க்கை முறைகளைக் குறிக்கிறது. புனிதமக்கள் இறைவனை நெருங்கி வருகின்ற பொழுது அவர்கள் மையத்தை நோக்கி பயணிக்கின்றனர். அத்தருணத்தில் ஒருவர் மற்றவரையும் நெருங்கி வருகின்றனர். எந்த அளவுக்கு அவர்கள் ஒருவர் மற்றவரை நெருங்கி வருகின்றார்களோ அதே அளவுக்கு இறைவனையும் நெருங்குகின்றார்கள். அன்பும் இத்தகையதே" (Dorotheus of Gaza, *Instructions* VI, 78).

தந்தை அன்னிபெல்லே தி ஃபிரான்ஸ் மற்றும் தொன் லூயிஜி ஓரியோனே (வலது புறம்) 1908.



# குவனெல்லாவின் பெற்றோர்கள்




தந்தை அலோசியஸ் குவனெல்லாவின் பெற்றோர்
தாய் மரிய பியாங்கி,
தந்தை லொரென்சோ குவனெல்லா.

மரிய பியாங்கி (Maria Bianchi 1806-1879) தனது பதினெட்டாவது வயதில் இருபத்தி நான்கு வயதுடைய லொரென்சோ குவனெல்லா (Lorenzo Guanella 1800-1874) என்பவரை மணந்தார். இவ்விருவரும் மிகவும் எளிமையான, நிலையான, எடுத்துக்காட்டான மலைவாழ் குடும்பத்தை மிகுந்த அக்கறையுடன் கட்டியெழுப்பினர். இவர்களுக்குப் பிறந்த பதின்மூன்று குழந்தைகளில், ஒன்பதாவது குழந்தையாக, 1842-ம் ஆண்டு டிசம்பர் 19-ல் பனிபொழி இரவில் வால்கிய-வென்னா என்னும் பள்ளத்தாக்கிலுள்ள பிரச்சிசியோ என்ற சிற்றூரில் அலோசியஸ் குவனெல்லா பிறந்தார். இது ஸ்புலுகா கனவாயிலிருந்து சுவிட்சர்லாந்து நாட்டுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்-துள்ள “காம்போதொல்ச்சினோ” (Compodolcino) என்ற நகரத்தின் ஒரு பகுதியாகும்.

இச்சிறிய மாவட்டமானது 1959-ம் ஆண்டு வரை ஆஸ்திரிய நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அலோசியஸ் குவனெல்லா தனது பள்ளிபடிப்பை கோமோவிலுள்ள காலீயோ (Gallio) என்ற கல்லூரியில் பயின்றார்.

பிரச்சிசியோ (Fraciscio) கிராமமானது இயற்கை எழில் நிறைந்த மலையில் அமைந்துள்ளது.




பிரச்சிசியோ கிராமத்தின் எழில்மிகு தோற்றம்.

இம்மலையானது இந்தக் கிராமத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய கொடையாக அமைந்திருந்தது. ஏனெனில் இதில் இருந்து புறப்படும் நீரோடைகள் இந்தக் கிராமத்தின் வழியாக ஓடி இதை ஒரு பசுமைநிறைந்த புல்வெளியாகவும், பனி நிலங்களாகவும் மாற்றி அங்கு சிற்றோடைகளையும், சிற்றருவிகளையும் உருவாக்குகின்றது. இதனால் இப்பகுதி செழிப்பான சமவெளியாக உள்ளது. அக்காலத்தில் இது ஒரு மிகச்சிறிய குக்கிராமமாக இருந்தாலும், அங்கு மக்கள்தொகை சற்று அதிகமாகவே இருந்தது. காரணம் குடும்பங்களில் அதிக அளவில் குழந்தைகள் இருந்தனர். ஏழ்மை தாண்டவமாடினாலும் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இறைவனின் கொடையாக பெற்றோர்கள் வரவேற்றனர். இங்குள்ள மக்கள் மலைவாழ் குணத்தைப் பெற்றவர்களாகவும், கடும்



பிரச்சிசியோவில் தந்தை குவனெல்லா பிறந்த இல்லம்.

தந்தை குவனெல்லாவை மிகவும் கவர்ந்த வல்த்தலீனா மலை பள்ளத்தாக்குகள்.



காம்போதோல்ச்சினோ பங்குகோயில்.



உழைப்பாளிகளாகவும், பணிவுள்ளவர்களாகவும் அனைத்திற்கும் மேலாக பக்தியுள்ளவர்களாகவும் திகழ்ந்தார்கள். எனவே, இவ்வழகிய மலை சூழ்ந்த கிராமம் "புனிதர்களின் பள்ளத்தாக்கு" என அழைக்கப்பட்டது. கிராமத்தின் சாலை ஓரங்கள் ஆலயங்களாலும், மற்றும் இரும்பு, மரச் சிலுவைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வீட்டுச் சுவர்களில் திரு இருதயப்படங்கள், மாதாவின் படங்கள் மற்றும் புனிதர்களின் படங்களையும் வைத்து வழிபட்டு வந்தனர். இங்கு வாழ்ந்த குடும்பங்களுக்கு வறுமையும், பட்டினியும் அன்றாட நிகழ்வுகளாக அமைந்திருந்தது. காரணம் இவர்கள் சிறு விவசாயிகள். அவர்கள் விவசாயத்தையும் ஆடு, மாடுகள் வளர்ப்பதையுமே நம்பியிருந்தனர். தங்களுக்குச் சொந்தமான குறைந்த அளவிலான நிலங்களைச் சிறிதும் வீணாக்காது அதில் கடினமாக உழைத்தனர், மற்றும் சிலர் சுவிட்சர்லாந்து செல்லும் சாலையில் சிறு சிறு வியாபாரங்கள் செய்து வாழ்க்கை நடத்தினர். ஒரு சில தைரியசாலிகள் ஊரைவிட்டு வெளியேறி வெகுதூரத்திலுள்ள அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று குடியேறினர். தந்தை குவனெல்லாவின் காலத்தில் இக்குடியேறுதல் அதிக அளவில் இருந்தது.




தந்தை குவனெல்லாவின் குடும்பம் செல்வந்தர்களாக இல்லாவிடினும் அடிப்படை வாழ்க்கைக்குத் தேவையான உணவும், உடையும், உறைவிடமும் குறைவின்றி பெற்றிருந்தனர். இவர்கள் தங்களிடம் உள்ளதை எளியவர்களுடன் பகிர்ந்துக் கொள்ள ஒருபோதும் தவறியதில்லை, பகிர்ந்துண்பதில் இவர்கள் குடும்பம் ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது. தந்தை அலோசியஸ் குவனெல்லா தந்தை லொரென்சோ, அதற்கு முன் இவரின் பாட்டனார் தோமாசோவும் (Tomaso) பிரச்சிசியோ கிராமத்தின் ஊராட்சி நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் இவர்கள் குடும்பத்தினர் ஏழைகளுக்கு உதவும் வாய்ப்பு அதிகம் கிடைத்தது.

தந்தை குவனெல்லாவின் தாயார் மரியா மற்றவர்கள் மேல் அக்கறையும், தம் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் மிகுந்த உற்சாகமும் கொண்டிருந்தார். பிள்ளைகளுக்கு இறைபற்றை ஊட்டுவதில் மிகுந்த ஈடுபாடு காட்ட ஒருபோதும் தவறியதில்லை. குவனெல்லா தன்னுடைய பெற்றோர்களைக் "கடவுளின் கண்பார்வையில் அருள் பெற்ற மூதாதையர்கள்" என முழுமையாக நம்பினார். தந்தை குவனெல்லா தம் பெற்றோர்களிடமும், தம் ஊரைச்

1842–ம் ஆண்டு டிசம்பர் 20 அன்று அலோசியஸ் திருமுழுக்குப் பெற்ற பங்கு கோயிலின் திருமுழுக்குத்தொட்டி.



கடலூர்:
தொன் குவனெல்லா
மாணவர் இல்ல
அடிக்கல் நாட்டு விழா.



சூழ்ந்திருந்த மலைகளிடத்திலும் அதில் வாழ்ந்த மக்களிடத்திலும் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். பிற்காலத்தில் தன் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை தந்தை குவனெல்லா தன்னுடைய எழுத்துக்களில் நெகிழ்ச்சியுடன் எழுத தவறியதில்லை. எடுத்துக்காட்டாக, 1885 செப்டம்பரில் வல்தலீனாவிற்கும் (Valtellina) தர்த்தானோ (Tartano) மற்றும் தலமோனாவிற்கும் (Talamona) இடையில் எதிர்பாராமல் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கால் வீடுகளும், அதில் வாழ்ந்த மக்களும், மலையின் ஒருபகுதியும் முழுமையாக அடித்து செல்லப்பட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

இந்நிகழ்வில் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் போது தந்தை குவனெல்லாவிற்குக் கிடைத்த அனுபவம் 1908-ல் மெசினாவிலும் (Messina) மற்றும் 1915-ம் ஆண்டு மார்சிகாவில் (Marsica) ஏற்பட்ட பூகம்பத்தின் போது மக்களுக்குப் பணியாற்ற பெரிதும் உதவியது. இதுபோன்ற இயற்கை பேரிடர்களின்போது மக்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளையும், மத, இன, மொழி வேறுபாடுகளையும் மறந்து, மனத்தால் ஒன்றுபட்டு செயல்படுகின்றனர் என்பதை தந்தை குவனெல்லா உணர்ந்தார். இதுபோன்ற தருணங்களில் குருக்கள் நாட்டோடு சேர்ந்து பணியாற்ற வேண்டுமென குறிப்பிடுகிறார் (*Opere*, III, 838).

குவனெல்லா குடும்பத்தினர் வாழ்ந்த எடுத்துக்காட்டான வாழ்க்கையும், கடின உழைப்பும், அன்புப்பணியும் சிறுவனான இவருடைய வாழ்க்கையில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதிலும் குறிப்பாக இவருடைய சகோதரி கத்தரீனாவின் (Caterina) (1841-1891) இறைபற்றுமிக்க வாழ்க்கை இவரை மிகவும் ஈர்த்தது. குருத்துவ வாழ்க்கைக்கு சகோதரி கத்தரீனா மிகவும் உறுதுணையாக இருந்தார். அவளது இறப்பு புனிதத்தின் நறுமணத்தை பரப்பியது. மிக ஆழமான குடும்பப் பின்னணி மற்றும் அனுபவங்கள் பிற்காலத்தில் தன்னுடைய சபை நிறுவியபோது இவருக்குப் பேருதவியாக இருந்தது. "தான் தொடங்கும் இல்லத்தில் ஏழை எளியவர்கள் ஒரு குடும்ப உணர்வோடும், பாசத்தோடும் நடத்தப்பட வேண்டும்" என்று விரும்பினார். தந்தையினுடைய



தந்தை குவனெல்லாவின் அன்பு சகோதரி கத்தரீனா குவனெல்லா.



பிரச்சிசியோவிலுள்ள குவனெல்லா குடும்பம், சிறுவன் அலோசியசும், சகோதரி கத்தரீனாவும் ஏழைகளுக்கு சூப் தயாரிக்கின்ற சிலை காட்சி.

சிறுவன் அலோசியஸ் தன் முதல் திருவிருந்தை பெற்ற பிறகு தியானம் செய்த குவெல்தேராவின் மோத்தோ தெல் வென்தோ மலை உச்சி.



வாழ்க்கை குறிப்பை பார்க்கும் பொழுது இவர் எத்தருணத்தில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார் என்பதும், மேலும் எப்பொழுது குருவாக வேண்டும் என்று முடிவு செய்தார் என்பதைப் பற்றிய குறிப்பும் எதுவுமில்லை. ஒரு சில நிகழ்வுகளையும், வார்த்தைகளையும் வைத்து அவரது அழைத்தலை தந்தையின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் உறுதி செய்கின்றார்கள். ஆனால் முற்றிலும் அவர்கள் ஒரு இறைபுதிரை ஆராய்கிறார்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள். இளமைகாலத்தில் பல நேரங்களில் இறையனுபவங்கள் பல நிகழ்ந்துள்ளன. இம்மாதிரியான இறை உந்துதல்கள், இவரிடம், தான் ஒரு குருவாக வேண்டும் என்ற ஆவலையும், எல்லோராலும் கைவிடப்பட்டவர்களையும், யாரும்நினையாத ஏழைகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற உந்துதலையும் அவரில் ஏற்படுத்தியது எனலாம். மேலும், ஒவ்வொரு இரவிலும், இவர்கள் செபித்த குடும்ப செபமாலை, தன் சகோதரி கத்தரீனாவுடன் ஏழைகளுக்குத் தயாரித்த கஞ்சி விளையாட்டு, (கூட்டாஞ்சோறு) காம்போதொல்ச்சினோ (Campodolinco) ஆலயத்தின் கதவருகில் தன் கரங்களை நீட்டி இனிப்புப் பண்டங்களைக் கேட்டு

உடனே மறைந்த முதியவர், அமைதியான மலைப் பகுதியில் ஆடு மாடுகளை மேய்க்க நீண்ட நேரம் தங்கியிருந்த போது, ஒருமுறை தன் உறவினரான குருவானர் கூறிய அறிவுரைகள், முதல் திரு-விருந்தன்று (April 8,1852) குவெல்தேரா (Gualdera) வில் இறைவனோடு தான் பெற்ற அலாதியான நெருக்கத்தை உணர்ந்தது போன்ற நிகழ்வுகள் சிறுவயதில் குவனெல்லா பெற்ற சில இறையனு-பவங்களாகும்.

மோத்தோ தெல் வென்தோ (Motto del vento) என்ற மலைப்பாறையில் தன்னை மறந்து இறை தியானத்தில் ஆழ்ந்திருந்த போது அவரது மனக்கண்ணில் தோன்றிய இறை அனுபவங்கள் பல வியப்பானவை என்றாலும், அவை அனைத்தும் வெறும் கற்பனையா? இல்லை உண்மையாகவே ஏற்பட்ட இறை அனுபவங்களா? என்று அறுதியிட்டு சொல்ல இயலாது. ஆம்! மரியன்னை இவருக்குத் தோன்றி கணக்கற்ற வறியவர்களை இவருக்குச் சுட்டிக்காட்டி அவர்களைக் காப்பாற்றுமாறு பணித்தார்.


குவெல்தேராவில் இளம் அலோசியஸ் மரியன்னையின் திருக்காட்சி பெற்றதை குறிப்பிடும் நினைவிடம்.


கோமோவில் அமைந்துள்ள காலீயோ கல்லூரியின் முன்புறத்தோற்றம்.



கல்லூரியின் உள்ளே முதன் முதலில் அலோசியஸ் 1854-ம் ஆண்டு அடி எடுத்து வைத்த நுழைவு வாயில்.

இறை அழைப்பின் நேரத்தையும், இடத்தையும் நம்மால் அறிய இயலாது. இறைவன் அழைக்கின்றார். அதுவே போதுமானது. தனது 12 வயதில் அலோசியஸ் குவனெல்லா கோமாவிலுள்ள சொமாஸ்கன் (Somaschan) குருக்களால் நடத்தப்பட்ட காலீயோ (Gallio) கல்லூரியில் சேர்ந்தார். பின்னர் மறை மாவட்ட குருமடத்தில் சேர்ந்து 1866 வரை பயின்றார். அங்கு கல்லூரியில் கல்வி உதவித்தொகைப் பெற்று பயிலும் 40 குருமாணவர்களில் ஒருவராக குவனெல்லா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட கல்விக் கட்டண சலுகைத் தொகை குறைவாக இருந்ததால் அங்கு வழங்கப்பட்ட உணவும் மிக எளிமையாக இருந்தது. அதனை குவனெல்லா மிகவும் மகிழ்வுடன் ஏற்றார். அதற்காக ஒரு போதும் குறைபட்டுக் கொண்டதில்லை. அவரது வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. ஆனால் அங்கிருந்த சில கடுமையான விதிமுறைகள் குருமட பயிற்சிக்கு உதவியாக இருந்தாலும், இவருக்கு ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் அவைகள் குறைபாடுகள் நிறைந்ததாகவும், தெளிவற்றதாகவும் இருந்தன. குருமட மாணவர்களின் தலைவர் என்ற முறையில் அவ்வாறான சட்டத் திட்டங்களை இளமாணவர்கள் பின்பற்ற அவர் வற்புறுத்தவில்லை. ஏனெனில் போர்க்கால சூழ்நிலை குருமடப் பயிற்சியைப் பாதித்தது மேலும் பியமோந்தேவுக்கும் (Piemonte) ஆஸ்திரியாவுக்கும் (Austria) சான் பெர்மோவில் (San Fermo) நடந்த போரின் விளைவாக நாட்டின் நிலைமை மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. 1859-ல் குவனெல்லா பயின்ற குருமடமானது கோமோ நகராட்சியில் தற்காலிக ராணுவ மருத்துவமனையாக மாற்றப்பட்டது. இப்போரில் கரிபால்டி (Garibaldi) வெற்றிவாகைச் சூடினார்.

தந்தை அலோசியஸ் முதல் திருப்பலி நிறைவேற்றிய புரோஸ்தோவில் உள்ள மரியன்னை விண்ணேற்பு ஆலயம்.



குருமடத்தில் குவனெல்லா ஒரு சிறந்த மாணவராக விளங்கினார். இவரது கடின உழைப்பும், ஒழுக்கமும் இவரை ஒரு தலைசிறந்த மாணவராக எடுத்துக்காட்டியது. வரலாறு, புவியியல் ஆகியவற்றில் தலைச்சிறந்து விளங்கினார். இதன் விளைவாக 1885-1887-ம் வருடத்தில் இவர் எழுதிய புத்தகமே இதற்குச் சான்று. இதில் ஆதாம் தொடங்கி திருதந்தை 9-ம் பத்திநாதர் (Pius IX) மற்றும் 13-ஆம் சிங்கராயர் (Leo XIII) வரையுள்ள வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவர் குருமாணவராக இருந்த



கடலூர்:
இறை பராமரிப்பு மரியன்னை மாணவியர் விடுதி.

காலத்திலேயே பிறரன்புப் பணி செய்ய வேண்டும் என்பது அவரது உள்ளத்தில் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நண்பர் ஒருவருக்கு ஆற்றிய அன்புப் பணியே அதற்கு சான்றாகும் என, அவரோடு பயின்ற நண்பர் ஒருவர் சான்று பகிர்கின்றார். நோயினால் பாதிக்கப்பட்டவர் அருகில் இருந்து இரவு பகலாகக் கண்விழித்துக் காத்திருந்து ஒரு அன்னையை விடவும் மேலான பாசத்துடன் அவருக்குப் பணிவிடை செய்தார் என்று கூறுகிறார். (L.Mazzuchi, *La vita, lo spirito e le opere di don Luigi Guanella*, 19). பிறரன்பு பணி மட்டும் அல்லாமல் மறைபரப்பு பணியிலும் அதிக ஆர்வம் காட்டினார். சில ஆண்டுகளுக்குத் தன்னை மறைபரப்பு பணிக்காக அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். இதை பல வருடங்களுக்குப் பின்பு கோமோவின் ஆயர் பீட்டர் கார்சனாவிடம் (Pietro Carsana) நினைவுப்படுத்தினார். குருமாணவராக இருந்த காலத்திலேயே இறையியல் வல்லுநர் ஒருவர் உதவியினால் கீழ்வல்தலீனாவில் (Valtellina) உள்ள புரோஸ்தோ தீ பியுரோ (Prosto di piuro)என்ற ஊருக்கு அனுப்பப்பட்டார். (1865-1866) இவ்வூரில் தான் அவர் மறைக்கல்வியைக் கற்பித்ததோடு, நற்செய்தியையும்போதிக்கலானார். அவர் இப்பணிகளை முடித்துவிட்டு இரவு நேரத்தில் 20 கி.மீ நடந்து தனது ஊரான பிரச்சிசியோவுக்குத் தாமதமாக வருவார். இவ்வாறு வீடு திரும்பும் பொழுது இரவு நேரத்தில் வீட்டிலுள்ளவர்களுக்கு இடையூறு விளைவிக்க மனமின்றி பெரும்பாலான நாட்களில் வீட்டிலுள்ள வைக்கோல் போரில் படுத்துத் தூங்கி விடுவார்.

## மலைப்பகுதியில் மறைபரப்பு பணியாளர்

கோமோவின் ஆயர் பெர்னார்தினோ மரியா பிரஸ்கோலாவின் (Bernardino Maria Frascolla) (1811-1869) திருக்கரங்களால் 1866-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள் இவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். "நான் இறைபணியில் ஓர் எரியும் வாளாக இருக்க விரும்புகிறேன்" என்பதே இவரது குருத்துவ விருதுவாக்கு. இவரோடு மேலும் பத்து பேர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். அச்சமயத்தில் கோமோ ஆயர் அரசியல் காரணங்களுக்காக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு முன்பே அறிமுகமான புரோஸ்தோவில் உள்ள மரியன்னை விண்ணேற்பு ஆலயத்தில் நற்கருணை பெருவிழாவன்று (Corpus Christi) (மே 31) தனது முதல் திருப்பலியை நிறைவேற்றினார். மனிதநேயம், கல்வி என்ற இரண்டு மேலான இலட்சியங்களோடு இவர் தனது குருத்துவ பணியைத் தொடங்கினார். நோயுற்றோரை சந்தித்து அவர்களுக்குப் பாசத்துடன் பணி செய்தார். மாலை நேரங்களில், இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் கல்விப் புகட்டுதல் போன்ற பணிகளை ஓய்வின்றி செய்து வந்தார். இவரின் இந்த அதிவேக அன்புப்பணி அவ்வூரில் உள்ள ஆட்சியாளர்-



புரோஸ்தோவில் உள்ள மரியன்னை விண்ணேற்பு ஆலயத்தின் அழகிய தோற்றம்.



சவோங்ஞோ குடியிருப்பின் ஒரு தோற்றம்.

களுக்கும், கட்டுப்பாட்டை விரும்பாத மேம்போக்கு கிறிஸ்தவர்களுக்கும், சினத்தை மூட்டியது. சிலர் இவரை வெளிப்படையாகவே எதிர்க்கத் தொடங்கினர். 1872-ல் இவர் எழுதிய நூலில் "இப்படிப்பட்ட மேம்போக்குவாதிகள் கிறிஸ்தவ மதத்தையும் அதன் கொள்கைகளையும் அழித்து விடுவார்கள்." என்று எச்சரித்துள்ளார் (Saggio di ammonimenti famigliari per tutti ma più particolarmente per il popolo di campagna).

1867 முதல் 1875 வரையுள்ள கால கட்டத்தில் அதாவது குவனெல்லா இறைபணியின் ஆரம்ப காலத்தில் அவரது பணி சற்று கடினமானதாகவே இருந்தது. சவோங்ஞோ (Savongno) என்ற அந்த மலைக்கிராமமானது 400 குடும்பங்களைக் கொண்டது. அச்சிறு கிராமமானது 1000 மீட்டர் உயரமுள்ள குன்றின் உச்சியில் அமைந்திருந்தது. அக்கிராமத்திற்குச் செல்ல மலைப்பகுதியில் குறைந்தது 3000 படிகள் ஏறிச்செல்ல வேண்டும், அல்லது மலையைச் சுற்றி நெடுந்தூரப் பயணம் செய்து, அவ்வூரை அடைய வேண்டும். இன்றும் அதேநிலைதான் நீடிக்கிறது. அங்கு அவர் பணியாற்றிய ஏழு ஆண்டுகள் பலதரப்பட்ட பரிமாணங்களைக் கொண்டதாக அமைந்தது. குறிப்பாக, "சமுதாய புனிதர்கள்" என்ற புதிய கொள்கையை வகுத்திட்டார். பிற்காலத்தில் எப்படிப்பட்ட இறைபணியாளராக வரப்போகிறார் என்பதற்கு இக்கிராமத்துப் பணி எடுத்துக்காட்டாக அமைந்தது. இங்கு அவர் கூலி தொழிலாளியைப் போல் பணியாற்றி ஆலயத்தை செப்பனிட்டார். அக்கிராமத்தின் பொது இடத்திற்கு மதில்கள் எழுப்பி பாதுகாப்பை உண்டாக்கினார். அவர் விவசாயியாக

1866-ல் முதல் திருப்பலி நிறைவேற்றிய கால கட்டத்தில் தந்தை குவனெல்லா.



தன்னையே மாற்றிக்கொண்டார். பல நேரங்களில் இவரது தன்னலமற்ற பணி இவருக்கே பிரச்சனைகளைக் கொடுத்தது என்று கூட கூறலாம். குறிப்பாக இவர் தனது பங்கு இல்லத்தையே மாற்றியமைத்து அதில் வகுப்பறைகளை உருவாக்கினார். ஏனெனில் கல்வியின் இன்றியமையாமையை மக்களுக்கு நன்கு உணர்த்த விரும்பினார். கல்விக் கூடங்கள் கடுமையான சட்டத்திட்டங்கள் கொண்ட கட்டமைப்பாக இல்லாமல், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே, குடும்ப உறவை ஏற்படுத்தும் இடமாக இருக்க வேண்டும். ஏனெனில் குடும்பத்திலுள்ளவர்களும், நாட்டு மக்களும் தங்கள் பிள்ளைகள் கடின உழைப்பாளிகளாகவும், நல்ல கிறிஸ்தவர்களாகவும் ஆசிரியர்கள் உருவாக்க வேண்டுமென விரும்புகின்றனர் (*Opere,* III, 593). நமது குழந்தைகள் கல்வியை விரும்புகின்றார்கள். இதை பள்ளிதான் அவர்களுக்கு அளிக்க முடியும் என்பது தந்தை அவர்களுக்கு நன்கு தெரியும். நமது தந்தையவர்கள் "ஒரு சிறந்த ஆசிரியரே சிறந்த மாணாக்கர்களையும், அதன் வழியாக சிறந்த குடும்பத்தையும், சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியும்" என்று நம்பினார். ஒரு சிறந்த சமுதாயம் ஒரு சிறந்த கல்விக்கூடத்தில்தான் கட்டப்பட முடியும். லெபினிட்ஸ் (Leibnitz) என்பவரின் கூற்றுப்படி, "என்னிடம் ஒரு பள்ளியைக் கொடுங்கள் நான் உங்களுக்கு அறிவும், பண்பும் உள்ள சமுதாயத்தை திரும்பத் தருகிறேன்" என உறுதிக் கூறினார். பள்ளிக்கூடங்களே சமுதாயத்தின் ஆணிவேர் என்பதும் அவரது கருத்து (*Opere*, IV, 1039). பள்ளி ஒரு நல்ல சமுதாயத்தின் பிறப்பிற்கும், இறப்பிற்கும் காரணமாக அமைகிறது (La Divina Providenza).



சவோங்ஞோவில் தந்தை அலோசியஸ் தங்கி இருந்த பங்கு இல்லம், அதை அவர் பிறகு மறு சீரமைப்பு செய்து பள்ளி வகுப்பறைகளாக மாற்றினார்.

இளந்தலைமுறைக்கு மட்டுமின்றி வயது வந்தவர்களுக்கும் கல்வியின் தேவையை உணர்ந்த தந்தை குவனெல்லா, அவர்களுக்குக் காலையிலும், மாலையிலும் விடுமுறை நாட்களிலும் கல்விக் கற்பிக்கத் திட்டங்களை வகுத்தார்.

தொன் குவனெல்லா அதிக துணிச்சலுடன் கத்தோலிக்க கல்விக் கூடங்கள் மற்றும் புத்தகங்கள் வழியாக மசோனிக் (திருச்சபைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டது) கல்விக்கூடங்களை எதிர்க்கொண்டார் (*Opere*, III, 69). கல்வியின் முக்கியத்துவத்துடன் நின்று விடாமல் உடல் ஆரோக்கியத்திற்கும் போதுமான கவனம் செலுத்தினார். சவோங்ஞோ (Savogno) கிராமத்தில் நிலவிய குடிநீர் பிரச்சனைக்குத் தீர்வு கண்டார். அக்கிராமத்திற்கு ஒரு நிலையான கல்லறைத் தோட்டம் தேவை என்பதை உணர்ந்து, அதையும் செயல்படுத்தினார். அக்கிராமத்துப் பெண்கள் படும் பலவகையான சிரமங்களைக் குறிப்பாக கடுங்குளிரிலும், கடும் வெயிலிலும் துணிகளைத் துவைப்பதைக் கண்டு அவர்களுக்கு மேல் கூரையுடன் கூடிய இடத்தை அமைத்து தந்தார்.

தந்தை குவனெல்லா இதை அழகிற்காக அல்லாமல் சுகாதாரத்திற்காகவும், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்பிற்காகவும் அமைத்தார். தனது கட்டளை செபத்தை முடித்துவிட்டு, ஆலய வளாகத்தை வலம் வருவதைத் தவிர்த்து, கிராமத்தைச் சுற்றி வந்து மக்களைச் சந்தித்து உரையாடுவதில் அதிக அக்கறைக் காட்டினார். நோயுற்றோரை அவர்கள் இல்லத்தில் சந்தித்து ஆறுதல் கூறினார். பல மைல் தூரம் நடந்துச் சென்று ஆடு மாடுகள் மேய்ப்பவர்களைக் கண்டு அவர்களுக்கு நம்பிக்கை-



சவோங்ஞோவில் தந்தை அலோசியஸ் துணி துவைப்பவர்களுக்கு கட்டிய ஓட்டுக் கொட்டகை.

கடலூர்:
புனித வளனார்
குருமடத்தின் எழில்
மிகு தோற்றம்.



யூட்டினார். ஏழைகளோடும், துன்புறுபவர்களோடும் பழகி அவர்களின் இன்னல்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை அவர் என்றும் தவறவிட்டதில்லை. மற்றவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் அதே தருணத்தில் அவர்களின் கடமைகளையும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டுவதில் தந்தை தவறியதில்லை. மனநிலை குன்றியவர்களை அவர் ஒருபோதும் அலட்சியப்படுத்தியதில்லை. ஒரு சமயம் தாயை இழந்த சிறுவனை அனாதை இல்லத்திற்கு அனுப்ப மறுத்து, அக்குழந்தைக்கு ஏற்ற வளர்ப்புப் பெற்றோரை ஏற்பாடு செய்தார்.

தந்தை குவனெல்லா மலைவாழ் மக்களைப் பக்தியோடு திருவருட்சாதனங்களில் பங்குப் பெறத் தூண்டினார். தேவ அழைத்தலை ஊக்குவித்து குறிப்பாக துறவற சபைகளாகிய தந்தை தொன் போஸ்கோ மற்றும் கொத்தலெங்கோ ஏற்படுத்தியிருந்த சபைகளுக்கு ஆர்வ மிக்க பிள்ளைகளை அனுப்பி வைத்தார்.

தான் பணி செய்த அந்த மலை கிராமத்திலிருந்தும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்தும் பலரை அவர் இறைப்பணிக்கு ஆற்றுப்படுத்தினார். இப்பகுதியில் அவர் பக்திப்படங்களையும், சிற்றாலயங்களையும் திருவுருவச்சிலைகளையும் அமைத்து வழிபோக்கர்களுக்கும் கூட இறை உணர்வை தூண்டினார். கற்சிலைகளும் மக்களின் உள்ளத்தில் பக்தி உணர்வை தூண்டும் என்பது அவரது நம்பிக்கையாகும்.


## தந்தை ஜான் போஸ்கோவுடன் குவனெல்லா

சவோங்ஞோ (Savogno) பங்கு மக்களால் தந்தை குவனெல்லா அதிகமாக நேசிக்கப்பட்டதோடு மட்டுமின்றி, மிகவும் பாராட்டவும்பட்டார். இதற்கு முக்கிய காரணம் அவர் எப்பொழுதும் எளியவர் பக்கம் இருந்ததேயாகும். அப்போதைய அரசு ஆலய சொத்துக்களை நாட்டுடமையாக்கியதால் பங்கு மக்களில் பலர் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இதை தந்தை குவனெல்லா துணிச்சலுடன் எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், மக்களின் சொத்துக்களை மீட்டும் தந்தார். (*Le vie della provvidenza*, 45) அது மட்டுமின்றி அச்சட்டம் நடைமுறைப்படுத்த முடியாதபடி அதை முறியடித்தார். அப்போதிருந்த பல ஊழல் அதிகாரிகளையும் பல்வேறு இடங்களுக்கு மாற்றும்படியும் செய்தார். இதுபோன்ற அவரது அரும்பணிகளைப் பங்கு மக்கள் உன்னிப்பாகக் கவனித்து தந்தையைப் பாராட்டினர்.

ஆனால் இம்மாதிரியான பாராட்டுக்களால் தந்தை குவனெல்லா நிறைவடையவில்லை. மாறாக தனது பணிதளத்தை மேலும் விரிவுப்படுத்த விழைந்தார். அவர் பிற பங்குத்தளங்களைத் தன்னோடு சேர்ந்து போராட அழைத்தார். அதில் பயனேதும் இல்லை. அதன் விளைவாக 1871-ம் ஆண்டில் தந்தை ஜான்போஸ்கோவோடும், அவரது கல்வி நிறுவனங்களோடும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். தூரின் நகர குருவைப் பற்றி தன்னுடைய குருமாணவர்கள் வழியாக அறிந்திருந்தார். அம்மாணவர்களில் பலர் ஜான் போஸ்கோவின் ஆன்மீகவுரையையும் பெர்கமோவில் (Bergamo) அவர் கொடுத்த தியான உரைகளையும் கேட்டு அறிந்திருந்தனர்.

தந்தை குவனெல்லா ஜான்போஸ்கோவுடன் அதிகாரிகளைத் தொடர்புக் கொள்ளச் செய்து, கோமோவில் சலேசிய கல்வி நிறுவனம் ஒன்றினை ஏற்படுத்த முயன்றார். ஆனால் அப்போது நிலவிய முற்போக்கு அரசியல் கொள்கைகளால் அது இயலாமல் போயிற்று (*ibid.*, 44). இந்தச் சூழ்நிலை தந்தை குவனெல்லா, தந்தை ஜான் போஸ்கோவுடன்

புனித
தொன் போஸ்கோ
(1815-1888)
குருக்களுக்கு
சலேசிய சபை மற்றும்
மகளிர்க்கு இடைவிடா
சகாய அன்னை
(Daughters of Mary
Help of Christians)
சபைகளின் நிறுவனர்.
இவரை திருதந்தை
11-ம் பத்தி நாதர்
1934-ல் புனிதராக
அறிவித்தார்.



இணையும் நிலையை உறுதிப்படுத்தியது எனலாம். தந்தை குவனெல்லாவின் இந்த முடிவை யாராலும் மாற்றியிருக்க முடியாது. ஏன்? ஆயர் கர்சானாவின் உத்தரவுகூட குவனெல்லாவின் முடிவை மாற்றி இருக்க முடியாது என்பது திண்ணம். காரணம் தந்தையின் முடிவு ஆல்ப்ஸ் மலை பாறைபோல உறுதியானது (*P. Buzzetti, Le Chiese nel territorio dell'Antica Communtià di Piuro*, 1992-131).

தந்தை குவனெல்லா தனது பங்கினையும், பங்குத் தளத்தையும் தந்தை ஜான் போஸ்கோவால் அனுப்பி வைக்கப்பட்ட தந்தை மைக்கேல் சாலாவிடம் ஒப்படைத்துவிட்டு, தனது இலட்சியப் பணிக்காகப் புறப்பட்டார். கியவென்னா செல்லும் சாலையில் தனது நண்பர்களைச் சந்தித்து பிரியாவிடைபெற்றுச் சென்றார். 1874-ம் ஆண்டு குவனெல்லாவின் தந்தை லொரென்சோ மரணமடைந்தார். ஜனவரி 24-ம் தேதி எவ்வித திட்டமுமின்றி தனது பயணத்தை தந்தை குவனெல்லா தொடங்கினார். அதாவது அவரது தந்தை இறந்து சரியாக ஓராண்டு நிறைவு பெற்றிருந்த போது இவர் இப்பயணத்தைத் தொடங்கினார். ஆனால் இதுவே அவரின் எதிர்காலப் பயணத்தை நிச்சையிக்கும் தொடக்கப் பயணமாக அமைந்தது. தந்தை குவனெல்லாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தந்தை ஜான் போஸ்கோ "அமெரிக்கா செல்வோமா?" என்ற வினாவோடு வரவேற்றார். ஏனெனில் குவனெல்லா-




தூரின் நகரிலுள்ள புனித இடைவிடா சகாய அன்னையின் பேராலயம்.



திரினித்தா தி மோன்தோவியிலுள்ள பங்கு ஆலயம்.

வுடன் இணைந்து அர்ஜென்ட்டினாவில் தன்னுடைய புதிய பணிதளத்தை உருவாக்க தந்தை ஜான் போஸ்கோ எண்ணியிருந்தார்.

தூரின் நகரில் தந்தை அவர்கள் இடைவிடா சகாய அன்னை ஆலயத்தில் மறையுரை ஆற்றுவதிலும், மறைக்கல்வி போதிப்பதிலும் தன்னை ஈடுபடுத்தி-யிருந்தார். நகரின் வெளியிலும் மறைபணி செய்து வந்தார். 1875-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் நாள் குவனெல்லா தன்னை மூன்று வருட துறவற வார்த்தைப் பாட்டினால் சலேசிய சபையில் இணைத்துக் கொண்டார். சலேசிய சபையில் போர்த்த நோவாவிலுள்ள (Porta Nuova) புனித லூயிஜி ஆறட்டரி, (செபமும், மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும் பொழுதுப் போக்கு நிகழ்ச்சிகளும் நிறைந்த பணிதளத்திற்குப்) பொறுப்பு வகித்தார். இங்கு அவர்



தந்தை அலோசியஸ் ஆசிரியப் பயிற்சி பெற்ற திரினித்தா தி மோன்தோவிலுள்ள ரோசா கோவோனே என்ற ஆசிரிய பயிற்சிப் பள்ளி.




திரினித்தா தி மோன்தோவியில் உள்ள இரயில் நிலையம்.

பலதரப்பட்ட பொது நிலையினருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. கிறிஸ்தவர்கள் "அன்னை மரியின் புதல்வர்கள்" என்ற பொது நிலையினரின் அமைப்போடு இணைந்து பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்தது.

இவர்கள் உதவியோடு முதியவர்கள் அதாவது இராணுவப் பணிக்கு பின் ஓய்வுப் பெற்றவர்களைத் தேவ அழைத்தலுக்கு ஆற்றுப்படுத்தும் பணியில் ஈடுபடுத்திக்கொண்டார். இவ்விதப் பணிகள் தந்தைக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நிறைவையும் அளித்தது. இதில் அவருக்குக் கிட்டிய அனுபவங்கள், அவர் தன் சபைகளை உருவாக்கும் போது அவருக்குப் பேருதவியாக இருந்தது. பொது நிலையினரின் உறவு ஒரு நிறுவனத்திற்கு ஆணிவேர் என்பதை உணர்ந்து கொண்டதன் விளைவாக "குவனெலியன் உடன் ஒத்துழைப்பாளர்கள்" என்ற பொது நிலையினருக்கான அமைப்பை நிறுவ வித்திட்டது.

ஓராண்டுக்குப்பின் திரினித்தா தி மோன்தோவி (Trinitá di Mondovi) என்ற ஊரில் பள்ளி ஒன்றை நிறுவுவதற்காக அனுப்பப்பட்டார். அங்கு அவருக்கு ஆயர் பிளாச்சிதோ போசியுடன் (Placido Pozzi)



சிலி : இரக்கம் காட்டுவதே எல்லா பாதுகாப்பிற்கும் அடிப்படை. (தந்தை குவனெல்லா)



கடலூர்:
முன்னாள் சபை தலைவர் அருட்தந்தை பீட்டர் பாஸ்குவாலி இந்திய வருகை.

கிடைத்த நட்பு பல ஆண்டுகள் தொடர்ந்தது. பிற்காலத்தில் இந்த ஆயருக்கு தந்தை அவர்கள் அன்பு பாராட்டியதன் விளைவாக ஆயர் அவர்களை பல நேரங்களில் தனது இல்லங்களில் அன்புடன் வரவேற்று உபசரிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மேலும் தன் சபையின் துவக்க காலத்து குருமாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டார். இக்காலகட்டத்தில் 1877-ல் தந்தை குவனெல்லா பிரான்சிஸ்கன் (Franciscan Tertiary) மூன்றாம் சபையின் உறுப்பினரானார். இதே சமயத்தில் அவர் ஆசிரியப் பணிக்கான பயிற்சிப் பெற்று ஆரம்பப்பள்ளி ஆசிரியராகும் தகுதி உள்ளவராக தன்னைத் தயார் படுத்திக்கொண்டார். ரோசா கோவோனே (Rosa Govone) என்ற பள்ளியில்தான் இவர் இதற்கான தேர்வை தனிமாணவராக எழுதி தேர்ந்தார். அதைத்தொடர்ந்து தந்தையவர்களின் நூல்கள் அச்சிடப்பட்டு வெளியாயின.

சலேசிய துறவற சபையில் இருந்தபோது அச்சபையின் பல முக்கியமான கொள்கை முடிவுகளை எடுப்பதிலும் திட்டமிடலிலும் முழுமையாக பங்கு கொண்டார். குறிப்பாக 1877-ம் ஆண்டு செப்டம்பர் 5 முதல் அக்டோபர் 5 வரை நடைபெற்ற அச்சபையின் முதல் பொதுஅமர்வு கூட்டத்தில் பங்கெடுத்ததைக் குறிப்பிடலாம். 1877-ல் இளைஞர்களுக்காக தந்தை போஸ்கோ எழுதிய "வரும் முன் காக்கும் கல்வித்திட்டம்" (Preventive system in the Education of youth) என்ற நூல் வெளியாகும் போது, தந்தை குவனெல்லா அவரோடு இருந்தார் என்பதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். இந்நூல் கல்விப் பணியாற்றுவதில் சலேசிய மற்றும் குவனெலிய சபையாருக்கும் சிற்சில கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் இரு சபையினரும் அதனையே தங்கள் வழிகாட்டி நூலாகக்கொண்டுள்ளனர்.

# ஆயத்தப் பணிக்கான உறைவிடம்

சலேசிய சபையில் தந்தை தொன் போஸ்கோ குவனெல்லாவிற்கு மிக முக்கிய பொறுப்புகள் பல கொடுத்து, அதில் அவர் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டாலும், அவரது மனதிற்கும், உள்ளத்திற்கும் அவை ஏற்றவைகளாக இல்லை. தந்தை குவனெல்லா தமது பணி, தந்தை தொன் போஸ்கோவின் பணிகளுக்கும், கொத்தலொங்கோவின் பணிகளுக்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். தந்தை கொத்தலெங்கோ (Cottolengo) முழுவதுமாக கைவிடப்பட்டவர்களுக்குச் செய்த பணிகள் தந்தை குவனெல்லாவை மிகவும் ஈர்த்தது. அதே நேரத்தில் தந்தை தொன் போஸ்கோவின் கல்விப் பணியைக் கண்டு வியப்படைந்தார். தொன் குவனெல்லா தொன் போஸ்கோவின் பணிகளால் ஈர்க்கப்பட்டதை, ஒருசிலர் "அவரிடம் தஞ்சம் புகுந்துள்ளார்" எனக்குறை கூறினார்கள். மேலும் குவனெல்லா அக்காலகட்டத்தில் ஏற்றபட்ட "தீவிர சமய சார்பற்ற மத தாராள மயமாக்கல்" கொள்கைக்கு எதிர்ப்பாளராகவும், திருதந்தைக்கும், அவருடைய நிலைப்பாட்டிற்கும் தீவிர ஆதரவாளராகவும் இருந்தார். இதனால் ஊடகங்களும், அதிகாரிகளும் இவருக்கு எதிராக செயல்பட்டனர். எனவே இந்நிலைப்பாட்டிற்கு எதிர்ப்பு வரும் போதெல்லாம் தந்தை குவனெல்லாவிற்கு சலேசிய



த்ரவோனாவின் அழகிய தோற்றம்.



த்ரவோனாவில் தந்தை அலோசியஸ் தங்கி இருந்த அறை.

சபை அனுபவம், எதிர்காலத்தில் மிகவும் துன்பப்படுகிறவர்களுக்குத் தான் துணிச்சலுடன் ஆற்றப்போகும் இறைபணிக்கான பயிற்சியாகவும், ஆதரவு அரணாகவும் இருந்தது.

தன்னுடைய வாழ்வில் அடுத்து எடுக்கப் போகும் தீர்க்கமான முடிவுக்கு, ஜான் போஸ்கோவின் சலேசிய சபையும், அங்குக் கிடைத்த அனுபவமும் அவருக்கு உந்து சக்தியையும், பலத்தையும் கொடுத்தது எனலாம். எனவே, இந்தக் காலத்தை "தன்னைத் தயார் படுத்துவதற்கான உறைவிடம்" எனத் தந்தை அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள். தன்னைப்பற்றி சொல்லும்போது நான் குறுக்கு வழியும் கூச்ச சுபாவமும் அறியாதவன் என்கிறார். "இறைவன் அவரை ஓர் சிறந்த பயன்பாட்டிற்காக குறிப்பாக கைவிடப்பட்டவர்களுக்காகவும், வறியவர்களுக்காகவும் துன்பப்படுகிற சமுதாயத்திற்காகவும் சேவை செய்ய ஒரு கருவியாக தயார்படுத்திக் கொண்டிருந்தார்".



த்ரவோனாவில் தந்தை குவனெல்லா ஆரம்பித்த பள்ளியும் கான்வென்ட் தோட்டத்தின் எழில்மிகு தோற்றமும் தொன் போஸ்கோவின் வழியை பின்பற்றி ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லமே தன் சபைக்கு ஆரம்பமாகும்.

1878- செப்டம்பரில் ஆயர் பீட்டர் கர்சானா (Carsana) அவர்களால் மறை மாவட்டத்திற்குத் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டு உதவி குருவாக த்ரவோனா (Traona) என்ற ஊருக்கு அனுப்பப்பட்டார். அங்கு சலேசிய முறையைப் பின்பற்றி ஓர் பள்ளியைத் தொடங்கினார். ஆனால் அப்பள்ளி தொடர்ந்து செயல்படாமல் பொருளாதார பற்றாக்-குறையினாலும், அரசியல் கிளர்ச்சியினாலும் மூடப்பட்டது.



பியனெல்லோ லாரியோவிலுள்ள பங்கு ஆலயம்.

இச்சமயத்தில் தந்தை குவனெல்லா நாடு கடத்தப்படுவதைப் போல ஆல்ப்ஸ் மலை உச்சியில் உள்ள ஓல்மோ (Olmo) என்ற இடத்திற்கு அனுப்பப்-பட்டார். இது அவருடைய குருத்துவ வாழ்வின் துன்ப காலகட்டம் என இதைக் கூறலாம். அவரின் இறை விசுவாசம் அதிகமாக சோதிக்கப்பட்டது. அவருக்கு ஒரே ஆறுதல் இறை தந்தை மட்டுமே. தனிமை, சோதனை, வேதனைகளை அவர் அதிகமாக அனுபவித்தார். ஆயினும் அவர் மனம் தளரவில்லை. அவர் வகுத்திருந்த திட்டத்திற்கு ஒரு சிறந்த சிற்பி உளியால் எப்படி சிற்பத்தை உருவாக்குகிறாரோ, அவ்வாறே இறைவன் தந்தை குவனெல்லாவை உருவாக்கி இறுதி வடிவம் கொடுத்து முழுமைப்-படுத்தினார் (*Opere*, IV, 1269). பியனெல்லோ லாரியோ (Pianello Lario) என்ற இடத்திற்குத் தந்தை புறப்பட்டார். இதுவே அவரது நேரம். தந்தை குவனெல்லாவிற்கு இறைவன் எப்பொழுதும் ஆதரவாகவும், இக்கட்டான காலங்களில் உறுதுணையாகவும் இருந்தார்.



பியனெல்லோ லாரியோவின் எழில்மிகு தோற்றம்.

## பணியின் துவக்கம்



பியனெல்லோ லாரியோவில் தந்தை கார்லோ கொப்பினி ஏற்படுத்திய இல்லம்.

1881-ம் ஆண்டு நவம்பர்த் திங்களில் கோமோ ஏரிக்கரையில் அமைந்திருந்த பியனெல்லோ லாரியோ (Pianello Lario) என்ற பங்கு பணியிடம் காலியாக இருந்ததால் அங்கு வருவதற்கு குவனெல்லா ஒப்புக்கொண்டார். ஆனால் பங்குக்குரு என்ற பதவியை ஏற்க மறுத்துவிட்டார். காரணம் அப்பதவி தன்னுடைய செயல்பாடுகளை முடக்கி-விடும் என எண்ணினார். இப்பங்குதளத்தில் பணியாற்றி வந்த தந்தை கார்லோ கொப்பினி (Carlo Coppini) சில மாதங்களிலேயே இறைவனடி சேர்ந்தார். (1827-1881) இவர் இளமையாக இருந்த-போது மசினி (Mazzini) என்பவருக்குச் செயலாளராக இருந்தார். இவர் 1871-ம் ஆண்டு “அமலோற்பவ அன்னை மகளிர் பக்த சபையை” (Pious Union of the Daughters of Mary Immaculate) நிறுவினார். கம்லாகோ (Camlago) என்ற ஒரு சிறிய இல்லத்தில் 1872-ல் இவர் நிறுவிய சபையில் நான்கு இளம் பெண்களே இருந்தனர். மார்செலீனா, தீனா பெசாத்தா, எலிசபெத்தா மற்றும் மதலினா மினாத்தா ஆகிய நால்வரும் ஆவர். இவர்கள் 1878 ஜூன் மாதம் 28-ம் நாள் இறைவனுக்குத் தங்களையே முழுமையாக அர்ப்பணிக்க உறுதி எடுத்துக் கொண்டனர். அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள அனாதை பெண் குழந்தைகளையும், நோயுற்-றோரையும் பாசத்துடன் அரவணைத்துப் பணி

தந்தை குவனெல்லாவோடு துணை நிறுவனராக இருந்த அருட்சகோதரி மார்செலீனா பொசாத்தா.






கோமோ திருத்தலத்தில் அமைந்துள்ள அருளாளர் கிளாரா பொசாத்தா திருவுடல்.

செய்தனர். விவேகமும், மனஉறுதியும் கொண்ட மர்ச்செலீனா பொசாத்தா மற்ற மூவரையும் வழி நடத்தினார். ஆனால் இதை நிறுவிய தந்தை கொப்பினியின் எதிர்ப்பாராத மரணம் இக்-கன்னியர்களை நிலைகுலைய செய்தது. ஒரு சிறு விதையாக அப்போதுதான் விதைக்கப்பட்ட இச்சபையானது துளிர்விட்டு உயிர்பெறுமா? என்பதே ஒரு கேள்விக்குறியானது.

எங்கு போவது? யாரிடம் செல்வது? யாரை நம்புவது? என்று அறியாது திகைப்புடன் நின்ற நேரத்தில் தான் தந்தை குவனெல்லா அங்கு வந்து சேர்ந்தார். ஆனால் கன்னியர்கள் குவனெல்லா மீது நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். காரணம் அவர்களுக்குக் கிடைத்த தவறான செய்திகளாகும். குவனெல்லா அங்கு வந்து சேர்வதற்கு முன்னரே, அவரைப் பற்றிய தவறான செய்திகள் அவருக்கு முன் வந்து விட்டன. குவனெல்லா பலவித வினோதமான கருத்துக்களைக் கொண்டவர், கோபக்காரர், பிடிவாத-முள்ளவர், மிகவும் எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டியவர் போன்ற செய்திகள் இவ்விளங் கன்னியர்களை வெகுவாகப் பாதித்திருந்ததால், குவனெல்லாவுக்கு இவர்களை அணுகுவது பெரிய சவாலாக இருந்தது. ஆனால் புத்திசாலியான




ஏரிக்கரையில் அமைந்துள்ள பியனெல்லா லாரியோவின் அழகிய தோற்றம்.

மார்ச்செலீனாவுக்கு அவருடன் பகிர்ந்துக் கொண்ட எளிய உணவுக்குப்பின் குவனெல்லாவை மிக நன்றாகப் புரிந்து கொண்டார். இவர்தான் பிற்கால உடன் நிறுவனர் ஆவார். இறைவனின் அருள் இவர் இதயத்தில் ஒளிர்வதை உணர்ந்துக் கொண்டார். அன்று முதல் குவனெல்லாவை தங்களது எளிய இல்லத்தில் அன்புடன் வரவேற்று, அவர் வழிகாட்டு-தலையும் பெற்றனர். குவனெல்லாவும் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு வழிகாட்டி, சிறப்பான குறிக்-கோளையும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறாக, "பியனெல்லோ" என்ற சிறிய பங்கில் தொடங்கிய பணி விரைவாக வளர்ந்து பரவத் தொடங்கியது. இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரண-மாகத் திகழ்ந்தவர் கிளாரா பொசாத்தா என்றால் மிகையாகாது. இவர் மிகவும் அறிவு கூர்மை-யுள்ளவர். ஆனால் மிகவும் கூச்சசுபாவம் கொண்டவர். தனது 29-ம் வயதிலேயே விளக்க முடியாத ஓர் இறையனுபவத்துடன் காலமானார். இந்த இறையனுபவத்துக்குக் குவனெல்லாவின் ஆன்மீக வழிகாட்டுதலே முக்கிய காரணமாகும். திருதந்தை இரண்டாம் ஜான்பால் இவரை முக்திபேறு பெற்றவர் என்ற நிலைக்கு 1991 ஏப்ரல் 21-ம் நாள் உயர்த்தினார்.




20–ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோமோவின் அழகிய தோற்றம்.





20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிலான் நகரின் அழகிய தோற்றம்.

குவனெல்லா 1886-ம் ஆண்டு தனது இறைபணி பயணத்தை சில கன்னியர்களுடன் "பியனெல்லோ" என்ற பங்கிலிருந்து துவங்கினார். இக்கன்னியர் சபையின் பெயர் பல தடவை பலவிதமாக மாற்றப்பட்டு, இறுதியில் "இறைபராமரிப்பு மரியன்னை மகளிர் சபை" (Daughters of St. Mary of Providence) என அழைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக கோமோவில் தங்களது சபையை நிறுவினார்கள். இதற்கு நகராட்சித் தலைவரும் காரணமாக இருந்தார். இவர் திருச்சபைக்கும், குருக்களுக்கும் எதிர்கொள்கைகளைக் கொண்டவராக இருந்தாலும், தந்தை குவனெல்லா ஆற்றிய அன்புப்பணிகளையும் நன்கு அறிந்திருந்தார். மேலும் தந்தை குவனெல்லாவின் வற்புறுத்தலின் பேரிலும் சபையை நிறுவ உதவினார். "யுத்தம் என்பது மனித எண்ணங்களில் நடக்கிறது" என்ற கொள்கையை, தந்தை குவனெல்லா எதிர்த்தார் (*La Divina Provvidenza* 1893, 19). தந்தை அக்கொள்கைக்குத் தனது ஆதங்கத்தையும் தெரிவித்தார். இதன் மூலம் குவனெல்லா மற்றவர்களின் நம்பிக்கையைப் பெற்று, தன்னுடைய அன்புப்பணி நிறுவனத்தை கோமோவில் நிறுவினார்.



மிலான் நகர எழில்மிகு கோபுரத்தில் அமைந்திருக்கும் தந்தை குவனெல்லா சிலை.

1890-ல் மிலான் நகரில் ஆரம்பப் பள்ளிகளையும், வறியவர்களுக்கான இல்லங்களையும் துவக்கினார். மிலானின் ஆயர் அந்த்ரேய்யா கார்லோ பெர்ராரி (Andrea Carlo Ferrari) தொடக்க காலத்திலிருந்தே தந்தை குவனெல்லாவுக்குப் பேருதவியாக இருந்தார். அவரின் பணிவேகத்தை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏழைகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி, ஏழைகளைத் தேடிச் செல்ல வேண்டும், ஏழை என்று ஒருவர் இருக்கும் வரை தமது பணிக்கு ஓய்வில்லை என்று உறுதியாக நம்பினார். இப்படிப்பட்ட ஆர்வத்தோடு செயல்பட்டு குறுகிய காலத்திலேயே பல இல்லங்களை நிறுவினார். சில ஆண்டுகளிலேயே இத்தாலி, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இவரது இல்லங்கள் நிறுவப்பட்டன. முக்திபேறு பெற்ற பெர்ராரியும், குவனெல்லாவும் இணைந்து 1902-ம் ஆண்டு புண்ணிய பூமிக்கும், (Holy Land) 1908-ல் லண்டனில் நடைபெற்ற நற்கருணை மாநாட்டிற்கும் சென்று வந்தனர்.



1902-ல் புனித பூமிக்கு தந்தை குவனெல்லாவின் திருப்பயணம்.

எது எப்படி இருந்தாலும், தந்தை குவனெல்லா தம் சபையின் நோக்கத்தையோ, கொள்கையையோ சற்றும் தளர்த்த மறுத்துவிட்டார். ஏழை எளியவர்களுக்குத் தொண்டு என்ற நிலைப்பாட்டில் அவர் உறுதியாக இருந்தார்.

கோமாவில் பணி தொடங்கிய ஆரம்பக் காலத்திலேயே ஆண்களுக்கான ஓர் பணிதளத்தை அங்கு நிறுவினார். அதனால் அவர் ஏராளமான சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.



கோமோவில் உள்ள பட்டு நூற்பாலையிலிருந்து வீடு திரும்பும் தொழிலாளர்கள்.

முக்கியமாக வறுமையும், பராமரிப்பின்மையும் பெரும்பிரச்சனையாக இருந்தது. இதனை எதிர்கொள்வதற்கு, குவனெல்லா இவர்களுக்காக வேலை வாய்ப்பினைத் தேடித்தந்தார். அருகாமையிலுள்ள தொழிற்கூடங்களில் இளம்பெண்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடிக்கொடுத்தார். உழைப்பின் உயர்வை இவர் ஒருபோதும் மறக்கவில்லை. தனது தாரக மந்திரமான "உழைப்பே உணவு! உழைப்பே செபம்! உழைப்பே மீட்பு!" (*La Divina Provvidenza*, 1864, 169) என்பதை தவறாது வலியுறுத்தி வந்தார்.

இது மட்டுமல்லாமல் தன்னுடைய பணி நிமித்தம் அவர் எதிர்கொண்ட பிரச்சனைகள் பல்வேறு நிலைகளிலிருந்தும் வந்தன. இவர் பணியமர்த்திய தொழிற்கூடங்களில் திருச்சபைக்குக் கடும் எதிர்ப்புக்கொண்ட பல அமைப்புகள், இவருக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கத் துவங்கின. ஆயினும் தந்தை குவனெல்லா மனம் தளராது இவற்றை எதிர்கொண்டதோடு மட்டுமின்றி, தனது சபை கன்னியர்களை 1899-ல் தொழிற்கூடங்களுக்கு அனுப்பி அங்குப் பணிபுரிந்த இளம் பெண்களுக்கு ஆதரவாக இருக்கப் பணித்தார்.



கடலூர்:
புனித வளனார்
குருமட பாதுகாவலர்.

கோமோவில் ஏற்படுத்தப்பட்ட தலைமையிடத்தில் இறைபராமரிப்பின் இரக்கத்தால் சமூகத்தின் பல நிலைப்பட்டவர்களையும் சேர்த்து பணியாற்றினார். அனாதைகள், சிறுவர்கள், கைவிடப்பட்டவர்கள், மாணவ மாணவிகள், ஊமைகள், குருடர்கள், முதியவர்கள் போன்றவர்களை அரவணைத்தார். மனநலம் குன்றியவர்களை, குவனெல்லா "நல்ல குழந்தைகள்" (Good Children) என அன்புடன் அழைத்தார். ஆனால் அன்றைய சமுதாயத்தில் இப்படிப்பட்டவர்களைப் பைத்தியர்கள் என்றும், முட்டாள்கள் என்றும் மக்கள் அழைத்தனர். இவ்வாறு சமூகத்தின் பலதரப்பட்ட மக்களை ஒரே இடத்தில் வைத்து பாதுகாத்ததால் இவரது இல்லத்தை "நோவாவின் பெட்டகம்" என கோமோ மக்கள் அழைத்தார்கள். இவ்வில்லத்தில் பலதரப்பட்ட மக்களும் எளிமையாக, அதே சமயத்தில் கௌர-வமாகவும் பேணிக்காக்கப்பட்டார்கள். துன்புறும் ஒவ்வொருவரின் முகத்திலும் இயேசுவின் திருமுகத்தையே குவனெல்லா கண்டார். ஆயினும் இவருடைய பணியில் சிலர் குறைகளைக் காண-முயன்றனர். எல்லாருக்கும் எல்லா தேவைகளையும் ஒருவரால் பூர்த்தி செய்ய இயலாது என்பது இவர்களது குற்றச்சாட்டு. எனவே, இவரது பணியின் எல்லை-யைக் குறைத்துக் கொள்ளுமாறு ஆலோசனைக் கூறினர் (*Relazione per l'approvazione dell'Istituto*, November,19,1900).



கோமோவில் அமைக்கப்பட்ட குவெனெல்லாவின் முதல் இறை பராமரிப்பின் இல்லம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குவனெல்லா தன்னுடைய சபைக்கு அங்கீகாரம் வேண்டி திருச்சபையிடம் விண்ணப்பித்தார். ஆனால் துன்புறுவோர் மீது அவர் காட்டிய அளவு கடந்த அன்பும், எல்லை கடந்த அன்புப் பணிகளும் அதற்குத் தடையாயிற்று. அதே சமயத்தில் அவர் எல்லார் மீதும், எல்லா சந்தர்ப்பத்திலும் காட்டிய இரக்கமும், பரிவும் அவருக்கும் அவர் பணிக்கும் ஓர் தனித்துவத்தைக் கொடுத்தது எனலாம். இதுவே அவருக்குப் பலரிடமிருந்து பேராதரவையும், பெருமதிப்பையும், பெருமையையும் தேடித்தந்தது. ஓர் இறைபணியாளர் அல்லது அன்புப் பணியாளர் எவ்வாறு பன்முகம் கொண்ட பல பணிகளை எக்காலத்திற்கும் செய்ய இயலும் எனப் பலரும் அதிசயித்தனர். இதனால் உலகத்தின் பாராட்டுக்களையும் அங்கீகாரத்தையும் பெற்றார். இத்தகைய இறைபணி



பரகுவாய் நாட்டில் தந்தை குவனெல்லாவின் நோக்கம் பல்வேறு பரிமாணங்களில் செயல்படுத்தப்படுகிறது.

சமூகத்தின் பலதரப்பட்ட மக்களையும் சென்றடைந்ததால், மக்களுக்கு வியப்பையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கியது. ஆனால் பணியின் துவக்கத்திலிருந்தே இதை தூய ஆவி அவருக்குத்தந்த தனித்தன்மை என உணர்ந்திருந்தார்.

லோம்பார்டி (Lombardy) பள்ளத்தாக்கில் எங்கு நோக்கினும் காணப்பட்ட காட்சிகள் வறுமை, குறிப்பாகத் தங்க இடமும், ஆறுதலுக்கு சுற்றத்தாரின்றி தனிமையில் தவிக்கும் முதியவர்கள், நல்ல ஆரோக்கியமான உணவோ, உடையோ, கல்வியோ இல்லாத சிறார்கள், ஒழுக்கமும், குறைந்தபட்சக் கல்வியறிவும் மத வழிகாட்டுதலுமில்லாத சாதாரண குடிமக்கள், இவற்றிக்கெல்லாம் மேலாக சீரழிந்த நிலையில் காணப்பட்ட மனநோயாளிகள், இவ்வாறான மக்கள் அனைவரையும் குறிப்பாக மனநோயாளிகள், வீதிகளில் சுற்றித்திரியாமல்



மெனாஜோவில் நிறுவரான தந்தை குவனெல்லா பொது நிலையினரோடு அவ்வப்போது கலந்தாலோசித்து செயல்படும் காட்சி.

இருக்க மனித நேயத்தோடு அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என விரும்பினார்.

1883-ல் குவனெல்லா கோமோவுக்கு வருவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே அந்நகரில் மனநோயாளிகளுக்கான இரண்டாவது காப்பகம் துவக்கப்பட்டிருந்தது. ஆனால், இக்காப்பகத்தின் நிலை அவலமானது என்றே கூறலாம். அக்காலகட்டத்தில் மனநலம் பற்றியும், அதற்கான மருத்துவம் பற்றியும் பலரும் அறிந்திருக்கவில்லை. வயது முதிர்ந்த காலத்தில் ஞாபக மறதியால் பாதிக்கப்பட்ட முதியவர்கள் கூட, மனநல காப்பகத்தில் அடைக்கப்பட்டனர். மிகவும் சிறிய அளவில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், பேச்சுத்திறன் குன்றியவர்கள், சற்று அதிகமாக மறதி உள்ளவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், வலிப்பு போன்ற நோயுற்றவர்கள், போன்றவர்களும் மற்றவர்க்கு ஆபத்து விளைவிக்கும் அளவுக்கு மனநோய் முற்றியவர்களுடன் ஒரே காப்பகத்தில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இத்தகைய நோயாளிகள் பெரும்பாலும் குடிபோதையாலும், ஏழ்மையாலும் பாதிக்கப்பட்டு, நலிவடைந்த சமுதாயத்திலேதான் அதிகமாகக் காணப்பட்டார்கள்.



1908-ல் மிலான் நகரில் தந்தை குவனெல்லா.

சராசரி குடும்பத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளிலிருந்து தப்பித்துக்கொண்டு, சிரமமின்றி வாழ தங்கள் குடும்பத்தில் பயனற்றவர்கள் என்று கருதிய எல்லோரையுமே இப்படிப்பட்ட அவலநிலையில் உள்ளகாப்பகங்களிலும், துறவற இல்லங்களிலும் சேர்த்துவிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள். இதை தந்தை குவனெல்லா மிகவும் வன்மையாகக் கண்டித்தார். இது பாதிக்கப் பட்டவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி. அன்புக்கும், தர்மத்திற்கும் இழைக்கப்படும் கொடுமையாகக் கருதினார். ஏனெனில் அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் பிறந்த வீடுகளிலேயே வாழ்ந்து இறப்பது, அவர்களுக்குள்ள அடிப்படை உரிமையாகும் என உறுதியாக நம்பினார் (*La Divina Provvidenza,* 1903,51).



கோமோவில் உள்ள இறைபராமரிப்பு இல்லம்.

1910-ம் ஆண்டு தந்தை குவனெல்லா கோமோவில் உள்ள மனநோயாளிகள் காப்பகத்தோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி அக்காப்பகத்தில் உள்ள சிறிதளவே மனநிலை பாதிக்கபட்டவர்களையும், மருத்துவ சிகிச்சை தேவைப்படாதவர்களையும் அக்காப்பகத்திலிருந்து மீட்டு தன்னுடைய இறைபராமரிப்பு இல்லத்தில் வைத்து பராமரித்தார். இவ்வாறு மீட்கப்பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே எஜமான்கள் போல் நடத்தப்பட்டார்கள். தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளக் கற்றுக் கொடுக்கப்பட்டது. நல்லவர்கள் பலர் புரிந்த உதவியை இறைவன் கொடுத்த கொடையென ஏற்றுக்கொண்டார் தந்தை குவனெல்லா. அவர்கள் தங்களது சொந்த வீட்டில் முழு சுதந்திரத்துடன் வாழ்வது போல உணர வைக்கப்பட்டனர். இதன் மூலம் தன்னம்பிக்கை அவர்களில் வளர்ந்தது (*Opere*, IV, 450).

## ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட சபை அங்கீகாரம்

தந்தை குவனெல்லா கோமோ நகருக்கு வந்த ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் 1889-ல் இளம் மாணவர்களைச் சேர்த்து அன்பின் பணியாளர்கள் சபையைத் தோன்றுவித்தார்.

தொடக்க காலத்தில் தந்தை குவனெல்லா ஆண்களுக்காக "திரு இருதய மகன்கள்" (Sons of the Sacred Heart) என்ற சபையை நிறுவினார். அதன் பின்னர் இந்தப் பெயரை "தூய இருதயத்தின் பணியாளர்கள்" (Servants of the Sacred Heart) என மாற்றி அமைத்தார். இதற்கான வரலாற்று பின்னணி என்னவெனில், இக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சபைகள் அனைத்தும் திரு இருதயத்தின் பெயரிலேயே துவங்கப்பட்டன. இதனால் சபையின் பெயரை மாற்ற வேண்டிய சூழ்நிலை தந்தை குவனெல்லாவிற்கு ஏற்பட்டது. இந்தப் பெயர் மாற்றத்திற்கான காரணத்தை தந்தை குவனெல்லா நற்செய்தியின் அடிப்படையில் கீழ்கண்டவாறு விளக்குகிறார். பணியாளன் என்பவர் மகனுக்குக் கீழ்பட்டவர் என்ற கூற்றை நிராகரித்து, பணியாளர்கள் தாழ்நிலையில் உள்ளவர்களுக்குப் பணியாளராக இருக்க முடியும் என்பதைப் புரிய வைத்தார். ஆகவே அன்பின் பணியாளர்களும், மகன்களே ஆவார்கள்.



இறைபராமரிப்பு மரியன்னை மகளிர் சபைக்கு (Daughters of St. Mary of Providence) அங்கீகாரம் 1908-ம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று கிடைத்தது. பிரேசிலில் பணிதளம்.

இக்காலத்தில் குவனெல்லா தம் சபையைச் சார்ந்த கன்னியர்களுக்கும், குருமாணவர்களுக்கும் ஆன்மீக வழிகாட்டுவதிலும், நெறிப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தினார். கோமோவில் தந்தை குவனெல்லாவினால் எந்த விதமான ஆன்மீக துறவற நூல்களையும் எழுத முடியவில்லை. ஆயினும் சபைக்கான சட்ட நூலை எழுதி திருச்சபையினுடைய அங்கீகாரத்திற்குத் தயார்ப் படுத்தினார்.

தம் சபைக்குத் திருச்சபையின் அங்கீகாரம் பெறு-வதற்குத் தேவையான விண்ணப்பம், அதற்கான சட்டத் திட்டங்கள், ஒழுங்கு முறைகள் மற்றும் அது தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது மிகவும் சிரமமான காரியமாகவே இருந்தது. காரணம் அங்கீகாரம் கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாகவும், அதற்கான பணிப்பயணம் நீண்ட நெடும் பயணமாகவும் இருந்தது. 1896-ம் ஆண்டு தொடங்கிய இப்பணி குவனெல்லாவின் மறைவிற்குப் பின்னரும் தொடர்ந்தது. “இறைபராமரிப்பு மரியன்னை மகளிர் சபை” (Daughters of St. Mary of Providence) என்ற கன்னியர் சபைக்கு 1908-ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 27-ம் நாள் அங்கீகாரம் அளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் சபையின் சட்ட நூலுக்கு 1917-ம் ஆண்டு மே 20-ம் நாள்தான் முழுமையான அங்கீகாரம் கிட்டியது. அதன்பின் அன்பின் பணியாளர் சபைக்கான அங்கீகாரம் 1912-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ம் நாள் கிடைத்தது. ஆயினும் சபையின் அங்கீ-காரப்பணி 1935-ம் ஆண்டு ஜுலை திங்கள் 16-ம் நாள் வரை நீடித்து முழுமைப் பெற்றது.



அன்பின் பணியாளர் சபைக்கு (The Servants of Charity) அங்கீகாரம் 1935-ஆம் ஆண்டு ஜுலை 16 அன்று பெறப்பட்டது. கொலம்பியாவில் பணித்தளம்.

தம் சபைகளின் அங்கீகாரத்திற்கான செயல் பாடுகளின் போது தந்தை குவனெல்லாவிற்குப் பலதரப்பட்டவர்களின் தொடர்புகளும், அவர்களின் உண்மையான நிலைப்பாடும் தெரியவந்தது. பலர் அவரை ஏளனம் செய்தனர். பலர் அவர் மேல் குறை கண்டனர். ஒரு சிலர் எதிர்ப்புக் கூடத் தெரிவித்தனர். அதே நேரத்தில் பலர் அவருக்கு மிக்க ஆதரவாகவும், கனிவுடனும் இருந்தனர்.

இப்படி பலதரப்பட்ட உறவுகளில் ஒரு கூற்று எப்போதும் தொடர்ந்தது. என்னவென்றால் தந்தை குவனெல்லாவிற்கு ஒவ்வொரு முறையும் சபை-களுக்கு புதிய புதிய மாற்றங்களைத் திருச்சபை அதி-காரிகள் கேட்டதுதான். எங்கு தனது வளமையான முதன்மை தனித்தன்மை மாற்றப்பட்டுவிடுமோ என் பதில் அவர் அதிகம் அச்சம் கொண்டார்.

திருத்தந்தை அலுவலகம் இவரது சபை ஒழுங்குகளிலும், சட்டத்திட்டங்களிலும் சிறு சிறு மாற்றங்களைச் செய்ய ஆலோசனைக் கூறியது. குறிப்பாக சபையின் வரவு, செலவு கணக்குகள் பற்றியும், அதை நிர்வகிப்பது பற்றியும் தெளிவான நடைமுறை விதிகள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. மேலும் கன்னியர் சபையையும் குருக்கள் சபையையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் ஒரே குடும்பமாக கொண்டுவர விரும்பிய குவனெல்லாவின் விருப்பம் நிறைவேறவில்லை. மாறாக, இவ்விரு சபைகளும் தனித்தனி சபைகளாகவே அங்கீகரிக்-கப்பட்டன.

அமெரிக்காவில் (1912–1913) தந்தை குவனெல்லா திருத்தந்தையின் சிறப்பு இறைபராமரிப்பு தூதுவராக.



நல்லதிற்கு நல்லது செய்வது; மனிதனை புகழ்வதை விட கடவுளைப் புகழ்வது என்ற மன உறுதியோடு செயல்பட்டார் (*Opere*, IV, 817). சபை அங்கீகாரத்திற்காக தந்தை குவனெல்லா அரும்பாடுபட்டதால் அவர் பெரிதும் சோர்வடைந்தார். ஆயினும் அவர் மன உறுதியும், நம்பிக்கையும் தளரவில்லை. இவையெல்லாம் இறைவனின் விருப்பம் என்று பணிவுடன் ஏற்றுக்கொண்டு அயராது சபையின் அங்கீகாரம் பெற பணி-யாற்றினார்.

நீண்ட, கடினமான, ஆவலோடு எதிர்-பார்த்த, சபையின் அங்கீகாரம் நிறுவனரை மனச் சோர்விலும், சோதனையிலும்,

ஆழ்த்தியது. இருப்பினும் அவர் மனம் தளராமல், இப்பணி கடவுளிடமிருந்து வருகிறது என்பதைத் தாழ்ச்சியோடும், ஆக்கப்பூர்வமாகவும் நம்பினார். அசைக்க முடியாத பொறுமையுடன், தொடர்ச் சவால்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்தார். ஏளனம், எதிர்மறைபேச்சு, துன்புறுத்தல் போன்ற பல வகையான இன்னல்களுக்குத் தந்தை குவனெல்லா ஆளாக்கப்பட்டார். இதற்குத் திருத்-தந்தையின் ஆலோசகரும் அங்கீகாரம் அளிக்கும் குழுவின் அங்கத்தினருமான இரட்சகர் சபையைச் சார்ந்த தந்தை கிளாவுதியோ பெனதெத்தி (Claudio Benedetti) சான்று பகர்கிறார். இவரே சபையின் அங்கீகாரத்திற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தவர்.



கோமோ, இத்தாலி: முக்திபேறு பெற்ற கிளாரா பொசாத்தாவின் திருவுடல்.

தந்தை குவனெல்லாவின் நற்குணங்களை இவர் கீழ்கண்டவாறு பாராட்டியுள்ளார். "நான் அவரோடு பல ஆண்டுகள் பழகிய காலத்தில் அவரிடமிருந்து தவறான வார்த்தைகளோ, செயல்களோ வெளிப்பட்டதில்லை. அவரிடம் எந்தவிதமான சிறு குறையோ, தவறான பழக்க வழக்கங்களையோ கண்டதில்லை. எல்லா-வற்றிலும், எப்பொழுதும், உயர்விலும், தாழ்விலும் எவ்வித குழப்பமுமின்றி பொறுமையுடன், ஏமாற்றம் அடையாமல் இறைபராமரிப்பின் மீது அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டவராகத் திகழ்ந்தார்" (*Alcune notize sul servo di Dio don Luigi Guanella*, 1922).

## ரோமையும்
## தந்தை குவனெல்லாவும்

நமது தாய்த் திருச்சபைக் கட்டியெழுப்பப்பட்ட நகரமாகவும், திருத்தந்தையின் உறைவிடமாகவும் அமைந்ததாலேயே ரோமைநகரின் மேல் குவனெல்லாவுக்கு அளவுகடந்த பாசம் இருந்தது. தந்தை குவனெல்லா ரோமையைப் பற்றி எழுதும் போது ஒரு வாசகன் புனித ரோமைநகரின் அருமை பெருமைகளைக் காண திருயாத்திரைக்கு அழைத்து செல்வது போல் விவரிக்கின்றார். அங்குள்ள சாலைகளும் சிறுசிறு தெருக்களும் மறைசாட்சிகளின் விலைமதிப்பற்ற ரத்தத்தினாலும், புனிதர்களின் பாதங்கள் பட்டமையாலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இத்தகைய பெருமை வாய்ந்த இந்த இடத்தில் திருச்சபைக் கட்டியெழுப்பப்பட்டு, அங்கேயே திருத்தந்தையர்கள் சரித்திரம் படைத்து, இறை விசுவாசத்தை வளர்த்தார்கள் என்று ரோமை நகரின் சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

தந்தையைப் பொறுத்தமட்டில் ரோமை நகரமும், திருத்தந்தையும், திருச்சபையும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. ஒன்றிலிருந்து மற்றவற்றை பிரிக்கமுடியாது. இந்நகரத்தின் மீது தந்தை குவனெல்லா மிகுந்த அன்பும், திருத்தந்தையின் மீது மிகுந்த மரியாதையும் கொண்டிருந்தார்.



கிருத்துவத்தின் தொட்டில் என்றழைக்கப்படும் புனித இராயப்பர் பேராலயத்தின் முன் தோற்றம்.



ரோம் நகரில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட குவனெல்லிய சபையாரின் மரியன்னை ஆலயம்.

திருச்சபையை இயேசுவின் பாசமிகு மணவாட்டியாகவும், இராயப்பரின் மரக்கலமாகவும் தந்தை குவனெல்லா கண்டார். இதில் அன்பே ஒற்றுமையின் சின்னமாகும். அன்பின் பரம இரகசியத்திலிருந்து திருச்சபை தனது கடுமையான சவால்களைச் சந்திப்பதற்கான வலிமையைப் பெறுகிறது. இவ்வலிமையைத் திருச்சபை எப்போதும் கைவிடுவதில்லை. ஏனெனில், மீட்பரின் திருச்சபையை நாடுவோருக்கு அது வாழ்வளிக்க வல்லது என்று தந்தை குவனெல்லா நம்பினார். திருச்சபை இறைவனின் அன்பின் பணிதளமாகும். அது என்றென்றும் அழியாவரம் பெற்றது (*Opere*, II/1, 156). விவிலியத்தில் கூறப்படும் உவமையில் கோதுமை மாவை பதப்படுத்தும் புளிப்பு மாவு போல புளிப்பு மாவாகிய திருச்சபை, மனித குலம் என்ற மாவை பதப்படுத்தும் கருவியாக செயலாற்றுகிறது, என்பது தந்தையின் கருத்தாகும் (*ibid.*, 298).

குவனெல்லா ரோமைநகர் பற்றி பல முறை எழுதியும், பேசியுமிருந்தாலும் அந்நகரை முதன் முதலில் நேரில் பார்த்தது 1888-ம் ஆண்டில் தான். பின்னர் அந்நகரில் ஓர் பணியில்லத்தைத் தொடங்க



ரோம் நகரில் 1914-ல் தந்தை குவனெல்லாவும் தொன் ஓரியோனும்.



1908-ல் ரோமில் உள்ள பத்தாம் பத்திநாதர் பெயர் கொண்ட குவனெலிய சகோதரிகளின் முதல் இல்லம்.

விரும்பியதால் அடிக்கடி அங்கு செல்லும் வாய்ப்பு அவருக்குக்கிட்டியது.

ஏனெனில் ரோமை அவரது 20 ஆண்டு பணிகாலத்திற்கான சவாலாக அமைந்தது. மேலும் அவர் நிறுவிய இல்லமானது இறைதந்தையின் கருணைமிகு கண்காணிப்பால் உத்வேகத்துடன் வளர்ச்சியுற்றது (*La Divina Provvidenza*, 1914, 69-70). ரோமை நகரில் மோந்தே மாரியோ (Monte Mario) வில் தன் அன்புப் பணியினை 1903-ம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 4-ம் நாள் துவங்கினார். தந்தை தொன் ஓரியோனேவின் பாதுகாப்பில் இருந்த மோந்தே மாரியோ, தந்தை குவனெல்லாவின் கைகளுக்கு மாறியது. தந்தை குவனெல்லா, தந்தை தொன் ஓரியோனேவை (Don Orione) விட 30 வயது பெரியவராயினும், இவ்விரு தந்தையர்களும் ஒரே நேரத்தில் நிறுவனரானார்கள். ஏனெனில் தந்தை ஓரியோனே, தான் ஓர் இறையியல் மாணவராக இருக்கும் போதே இப்பணியைத் தொடங்கினார். தந்தை குவனெல்லா முழு முதிர்ச்சிக்காகக் காத்திருந்து பணியைத் தொடங்கினார். ரோமைநகரில் அமைந்த எல்லா கிறிஸ்துவ துறவற சபைகளையும், இறை இயேசுவில் ஒன்றிணைந்து தாய்த் திருச்சபைக்கு உதவ வேண்டும் என்ற தன் கருத்தினை தந்தை குவனெல்லா தந்தை ஓரியோனேவிடம் தெரிவித்தார்.

மோந்தே மாரியோவில் ஆரம்பித்த அன்புப் பணியானது மிக வேகமாக

ரோமில் பத்தாம் பத்திநாதர் பெயர் கொண்ட இல்லம்.



ரோமானியாவில் பல்வேறு சபையாருடன் செயல்பாடு.



விரிவடைந்தது. விரைவிலேயே ஜனிகுலம் என்ற இடத்தில் பெண்களுக்கான கிளைத் திறக்கப்பட்டது. பின்னர் 1908-ம் ஆண்டு புனித பங்கிராசியோ-விலுள்ள பழைய கார்மேல் சபை இல்லத்தில் நிரந்தரமாக நிறுவப்பட்டது. இக்கட்டிடமானது அவ்வூர் நகராட்சியிடமிருந்து மீட்கப்பட்டதாகும்.

மோந்தே மாரியோவிற்கு அடிக்கடிச் சென்று தந்தை குவனெல்லா அங்கு நிலவிய மிகவும் ஏழ்மையான சூழ்நிலைகளைக் கண்டார். இதே நிலைமை அருகில் இருந்த திரியேன்பாலேவிலும் காணப்பட்டது. திரியேன்பாலேவில் மிகவும் புகழ்வாய்ந்த பழைய நினைவு சின்னங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இருப்பினும் இந்தப்பகுதி உண்மையிலேயே ஒரு மறைபரப்பு பணிதளமாக காட்சியளித்தது. இதுவே நகரத்தின் குப்பைத்-தொட்டியாக விளங்கியது. ஆகவே துறவற சபைகள் அங்கு இல்லங்கள் அமைக்க தயக்கம் காட்டின (*P. Bertani, Piccola Storia della fondazione di San Giuseppe in Roma*, 1992, 27). திரியேன்பாலேவில் எல்லோரையும் அச்சுறுத்திய ஏழ்மைநிலையும், மக்களின் இன்னல்களும் தந்தை குவனெல்லாவை மிகவும் ஈர்த்தது. தந்தை குவனெல்லாவிடம் அதிக அன்பு கொண்டிருந்த தனது நண்பர் திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் கொடுத்த ஆதரவோடு தன் சபையின் கிளையை அங்கு நிறுவினார். ஓரிரு தற்காலிக குடிசைகள் அமைக்கப்பட்டு அங்கு சபை கன்னியர்களால் சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்வியும், கூடவே இறையன்பும் புகட்டப்பட்டது. அவரது சபைக் குருக்கள் கிறிஸ்துவின் அன்புப் பணிகளை ஆற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். 1902-ல் மரத்தாலான சிற்றாலயத்தைக் கட்டினார். பின்பு அதே இடத்தில் பேராலயம் கட்டும் பணி தொடங்கி 1912 மார்ச் 19-ம் நாள் தற்போது காணப்படும் புதிய ஆலயம் திறக்கப்பட்டது.

1913-ல் தந்தை குவனெல்லா முதன்மை குரு.



குவனெல்லிய சபை குருக்கள் தங்கள் இல்லங்களை விட்டுவிட்டு மக்கள் மத்தியில் வந்து பணி செய்து பல வகையான சமுதாய சீர்கேடுகளைக் களைந்தனர் (*La Divina Provvidenza*, 1914, 69-20).



ரோம் நகரில் திரியோன்ஃபாலே பகுதியிலுள்ள புனித வளனார் பேராலயம்.

குவனெல்லா தம் சக குருக்களுக்குப் பின்வருமாறு எழுதுகிறார்: "உங்கள் இல்லக் கதவுகளை யாருக்கும் மூட வேண்டாம். ஏனெனில் இறை பராமரிப்பின் அன்பின் பிள்ளைகளான ஏழைகளுக்காகவும், கைவிடப்பட்டவர்களுக்காகவும் எப்போதும் கதவுகளைத் திறந்து வைத்திருங்கள். எந்நிலையிலும் அவர்களுக்கு தீங்கிழைக்காதீர்கள். முதலில் வருபவர்களைப் பின்னுக்கு தள்ளாதீர்கள். ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் எவ்வளவு தாழ் நிலையில் இருந்தாலும் இரக்கம் காட்டுங்கள். ஏழைகள், கைவிடப்பட்டோர், துன்புறுவோர் இவர்களே இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்பதால் எப்போதும் அவர்களுக்கு முதலிடத்தைக் கொடுங்கள். தனிமையையும், ஏழ்மையையும் கண்டு கலங்காதீர்கள். ஏனெனில் கடவுளிடமிருந்தே இப்படிப்பட்டவர்களுக்குப் பணி செய்யும் அழைத்தல் நமக்கு வருகிறது. மேலும் இவர்களை இறைவன் நம்மிடம் கையளித்து கூறுகிறார்; இதோ! இந்த கைவிடப்பட்ட மனிதனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். என் நிமித்தம் இவருக்கு உணவளியுங்கள், ஏனெனில் நான் உங்களுக்கு மிகுந்த கைமாறு அளிப்பேன்" எனக்கூறினார் (*Opere*, IV, 796).



"சூரியன் மறையும் காட்சி எவ்வாறு அழகு நிறைந்ததாக உள்ளதோ அதைவிட மேலானது ஒரு மனிதனின் இறுதிநேரம்" என்பது தந்தை குவனெல்லாவின் பொன்மொழி.

# வாழ்வில் மிகவும் கைவிடப்பட்டவர்களுக்கு முதலிடம்



மெக்ஸிகோவில் குவனெலிய சபை அருள் சகோதரி சிறுபிள்ளைகள் மத்தியில்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் குவனெலிய நிறுவனம். "உணவோடு ஆண்டவரையும் மக்களுக்கு அளியுங்கள்" என்பது தந்தை குவனெல்லாவின் அமுதமொழி.

தந்தை குவனெல்லா என்றாலே நலிந்த நிலையில் வாழ்பவர்களோடு தன்னை முழுமையாக ஈடுபத்திக் கொண்டவர் என்பதாகும். ஏழைகள், மனநலங்குன்றியவர்கள், முதியவர்கள், இளைஞர்கள் எனக் கல்விக்காக ஏங்கும் அனைவருக்காகவும் தந்தைகுவனெல்லா பணியாற்றினார். தொடக்கத்திலிருந்தே தந்தை ஆரம்பித்த சபையினர் முழுமையாக கைவிடப்பட்டவர்களின் பணியில் ஈடுபட்டார்கள். தந்தை அவர்களைக் "கடையினர்" என்று அழைத்தார். அதனை ஒருசில வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், மற்ற அன்புப்பணி நிறுவனங்களால் கைவிடப்பட்டவர்களுக்காக அதிகமாக உழைத்தார். தந்தையவர்களுக்கு இவர்களே மிகவும் நெருக்கமானவர்கள் ஆவார்கள்.

தந்தை குவனெல்லா எப்பொழுதும் மனிதநேயம் உள்ள ஒரு கிறிஸ்துவ இதயம் அவதிப்படும் சகோதரைப் பார்த்து விட்டு உதவாமல் செல்லாது என்பதை வலியுறுத்தினார். இதன்மூலம் தந்தை அவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு இறைவன் முன்னுரிமை அளிக்கிறார் என்பதையும் உறுதிப்படுத்தினார். சீலோன் குளத்தில் முடவன் ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, எனக்கு உதவ யாருமில்லை" (*John* 5:7). என்று கூறிய அந்த வார்த்தைகள் தந்தையினுடைய இதயத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக, "இதோ நானிருக்கிறேன்" என்று தன்னையே இவர்களுக்காக அர்ப்பணித்தார்.



இவரது பணி முற்றிலும் மறைபரப்பு நோக்கங்கொண்டதாக இருந்தது. ஆகவே, 1913-ம் ஆண்டு தமது சபை சகோதரிகளை வட அமெரிக்க நாட்டுக்கு அனுப்பி வைத்தார். "உலகம் முழுவதும் உங்கள் தாய்நாடு" என்று தன்னைப் பின்பற்றியவர்களுக்கு அறிவுரை வழங்கினார். ஆகவே இன்று குவனெலிய குருக்களும் கன்னியர்களும் நான்கு கண்டங்-

களிலுள்ள 20 நாடுகளில் இயேசுவின் அன்பை சான்றுப் பகர்ந்து, நான்கு கண்டங்களையும் இணைத்து, அழகான ஓர் உலகம் செய்கிறார்கள் (*Opere*, IV, 763). அவருடைய பணி மனிதநேயம் கொண்டதாக இருந்தது. படைப்பில் அழகும், அழகின்மையும் ஒன்றையொன்று பிரிக்க முடியாமல் பின்னிப் பிணைந்திருக்கிறது. மனிதன் அறிவின் அவதாரம், பூமியில் இவன் கடவுளின் அதி உன்னத படைப்பு, இவனிலே படைப்பின் அதிமிக வியப்புகள் வெளிப்படுகின்றன (*Opere*, II/1, 20-21, 954). ஆயினும் மனிதன் ஒரு காய்ந்த இலை. காரணம் அவனுடைய ஏழ்மை, வீழ்ச்சி பாவயிருள் இதனை நினைவுப்-படுத்துகிறது (*Opere*, III, 346, 347). மனிதன் எப்படிப்பட்ட தாழ்நிலையில் இருந்தாலும், உடல் ஊனமோ, மனநோயோ அல்லது ஏழ்மையோ எதுவாக இருப்பினும் அவனும் இறை சாயலில் படைக்கபட்டவன். அவனுக்கும் மனித மாண்பு (Human dignity) உண்டு என்பதைப் பரிபூரணமாக உணர்ந்து, அவனுக்குப் பணிச் செய்ய வேண்டும் என்பது தந்தை குவனெல்லாவின் ஆழமான விருப்பம். கண்ணால் காண முடியாத நம் இறைவனை நாம் முழு மனத்தோடு அன்பு செய்வதை போல, நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோர், வறுமையுற்றோர், நோயுற்றோர் ஆகியவர்களில் இறைவன் சாயல் இருப்பதை உணர்ந்து, அவர்களுக்கு அன்புப்-பணியாற்ற வேண்டும் என வாழ்ந்தார் (*ibid*., 272). ஒவ்வொருவர் முகத்திலும் அறிவுகூர்மை தென்படாவிட்டாலும், தந்தை குவனெல்லா அப்படிப்பட்டவர்களிடம் இறையொளியைக் கண்டார். ஆகவே தன்னுடைய சக குருக்களிடம் நமது ஆன்மா இறைவனைக் காணாவிட்டாலும் இறைவனை முழுமனத்தோடு அன்பு செய்கிறது. நம்மைச் சுற்றியுள்ளவர்கள் ஏழ்மை நிலையிலிருந்தாலும் அவர்கள் ஒவ்வொரு வரும் இறைவனுடைய சாயல். அவர்கள் நமது சமுதாயத்தின் சகோதர, சகோதரிகள் என்று கூறி அகமகிழ்வோம். நம்மைச் சுற்றியுள்ளவர்களில் யாராவது ஒருவர், உடலாலும் மனத்தாலும் குறைபாடு உள்ளவர்களாக இருந்தால் அவர்கள் தான் நமக்கு மிகவும் வேண்டியவர்கள் (*ibid*., 878-879). தந்தை குவனெல்லா துன்பப்படுகின்றவர்களை எளிதில் கண்டுக்கொள்ளக்கூடிய அதி உன்னத வரம் பெற்றவராக இருந்தார்.



இந்தியாவில் ஏழைகளுடன் குவனெலிய அருட் சகோதரி.

ஆப்பிரிக்க நாடான கோங்கோவில் குவனெலிய சபையினர்.






கோமோவில் 1915-ம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற தந்தை குவனெல்லாவின் இறுதிப் பயணத்தில் பங்கு கொண்ட மறக்க முடியாத பெருங்கூட்டம்.

ஆகவே தந்தை குவனெல்லா தன்னையே 'அனைவரின் பணியாளன்' (1 *Co* 9:19) என்று கூறி, மற்றவரின் ஆன்மீக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திட்டார். இறைபராமரிப்பில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு தனது இல்லத்தின் கதவினைத் தட்டுகிறவர்களை ஏற்காமல் திருப்பி அனுப்பும் எண்ணத்தைக்கூட அவர் கொண்டிருக்கவில்லை.


ஆகவே தனது சபைத் துறவிகள், அன்பு செய்யும் தாயாகவும், தாராள குணமிக்க தந்தையாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். 1915 அக்டோபர்த் திங்கள் 24-ம் நாள் தனது 73-வது வயதில் தந்தை இறைவனடிச் சேர்ந்தார். இவரது உடலானது கோமோவிலுள்ள திரு இருதய பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த 50 ஆண்டுகளுக்குப் பின்னர் 1964-ம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 25-ம் நாள் தந்தை குவனெல்லாவை முக்திபேறு பெற்ற திருநிலைக்கு திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் (Paul VI) உயர்த்தினார்.

2011-ம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 23-ம் நாள் திருத்தந்தை 16-ம் ஆசீர்வாதப்பர் (Benedict XVI)



கோமோவில் திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் உள்ள புனித குவனெல்லாவின் திருவுடல்.



புனித குவெனல்லா இறை மாட்சிமையில்.

அவர்களால் புனிதர்பட்டம் வழங்கப்பட்டது. தந்தை குவனெல்லாவின் புனிதத்தின் ரகசியத்தை முற்றிலும் நாம் புரிந்து கொள்ள வேண்டுமாயின், புனிதரான அவரே நமக்கு உதவி செய்தால் மட்டுமேயன்றி இறைபராமரிப்பு ஆற்றிய அரும்பெரும் அருங்குறிகளை உணர முடியாது. தந்தை குவனெல்லா அன்பு செய்தார். நம்மையும், இறை பராமரிப்பாகிய இறை தந்தையை அன்பு செய்ய தூண்டுகின்றார். இறைத்தந்தை தன்னுடைய பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை, ஆனால் அவர்களுடைய உள்ளங்களிலே அவர் குடிகொண்டு, தன்னையே முழுமையாக உணர வைத்து, எல்லா சூழ் நிலைகளிலும் இறைவன் இருக்கின்றார் என்பதை உணர்த்துகின்றார். எல்லாம் அவருடைய இறைபிரசன்னம். வாழ்க்கை பாதையில் வருகின்ற இடர்பாடுகளை மன வலிமையோடு சந்திக்கவும், நமது உள்ளங்களில் அலைமோதுகிற இன்னல்களுக்கு ஆறுதல் அளித்தும், தம் பிள்ளைகளான நம்மை பராமரிக்கின்றார்.



கடலூர்: இறை பராமரிப்பு மரியன்னை சபை கன்னியர்களின் மாலை நேரக்கல்விப் பணி.



இந்திய மண்ணிலே பயிற்சிபெற்ற முதல் இந்திய குருக்கள்
சபை தலைவர்களுடனும் மற்றும் பாண்டி– கடலூர் பேராயருடனும்.



வத்திக்கான் நகர கர்தினால் தார்சியூஸ் பெர்தோனே இறை பராமரிப்பு
மரியன்னை சகோதரிகளின் மத்தியில், சபை அங்கீகாரத்தின் நூற்றாண்டு விழாவில்.






சபை தலைவர்களின் இந்திய வருகை.



புனித குவெனல்லா இறை மாட்சிமையில்.

அவர்களால் புனிதர்பட்டம் வழங்கப்பட்டது. தந்தை குவனெல்லாவின் புனிதத்தின் ரகசியத்தை முற்றிலும் நாம் புரிந்து கொள்ள வேண்டுமாயின், புனிதரான அவரே நமக்கு உதவி செய்தால் மட்டுமேயன்றி இறைபராமரிப்பு ஆற்றிய அரும்பெரும் அருங்குறிகளை உணர முடியாது. தந்தை குவனெல்லா அன்பு செய்தார். நம்மையும், இறை பராமரிப்பாகிய இறை தந்தையை அன்பு செய்ய தூண்டுகின்றார். இறைத்தந்தை தன்னுடைய பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை, ஆனால் அவர்களுடைய உள்ளங்களிலே அவர் குடிகொண்டு, தன்னையே முழுமையாக உணர வைத்து, எல்லா சூழ் நிலைகளிலும் இறைவன் இருக்கின்றார் என்பதை உணர்த்துகின்றார். எல்லாம் அவருடைய இறைபிரசன்னம். வாழ்க்கை பாதையில் வருகின்ற இடர்பாடுகளை மன வலிமையோடு சந்திக்கவும், நமது உள்ளங்களில் அலைமோதுகிற இன்னல்களுக்கு ஆறுதல் அளித்தும், தம் பிள்ளைகளான நம்மை பராமரிக்கின்றார்.



கடலூர்: இறை பராமரிப்பு மரியன்னை சபை கன்னியர்களின் மாலை நேரக்கல்விப் பணி.



இந்திய மண்ணிலே பயிற்சிபெற்ற முதல் இந்திய குருக்கள்
சபை தலைவர்களுடனும் மற்றும் பாண்டி- கடலூர் பேராயருடனும்.



வத்திக்கான் நகர கர்தினால் தார்சியூஸ் பெர்தோனே இறை பராமரிப்பு
மரியன்னை சகோதரிகளின் மத்தியில், சபை அங்கீகாரத்தின் நூற்றாண்டு விழாவில்.





சபை தலைவர்களின் இந்திய வருகை.





இந்திய மண்ணில் முதல் சாட்சிகள்
தந்தை 'தோமினிக் சஜினாரியோ' அருட் சகோதரி 'எரினா'.



நவசன்யாசிகள் – தந்தை கார்லோசுடன்.



கடலூர்: புனித வளனார் குருமடத்தின் எழில்மிகு தோற்றம்.

திருச்சபையின் ஆசிரோடு தந்தை குவனெல்லாவின் மறைபரப்பு சமுதாய மேம்பாட்டுப் பணிகள் வாழையடி வாழையாக தொடர்கிறது (அகஸ்டின் ஜெமலி). இதன் வெளிப்பாடே தமிழ் மண்ணில்...















DON GUANELLA
BOYS HOME.

























Independence
Day






## சுனாமி பேரழிவின்போது
## குவனெலிய சபையினரின் அரும்பணிகள்.






















# பொருளடக்கம்

| | |
|---|---|
| அறிமுகம்............................................................... | 3 |
| 1842–ல்................................................................. | 5 |
| குவனெல்லாவின் பெற்றோர்கள் .................................. | 8 |
| குருத்துவ அழைப்பு ................................................... | 13 |
| மலைப்பகுதியில் மறைபரப்பு பணியாளர்........................ | 18 |
| தந்தை ஜான் போஸ்கோவுடன் குவனெல்லா.................. | 23 |
| ஆயத்தப்பணிக்கான உறைவிடம்................................ | 28 |
| பணியின் துவக்கம்...................................................... | 31 |
| அன்பின் பெட்டகம் ..................................................... | 37 |
| ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட சபை அங்கீகாரம் ............. | 41 |
| ரோமையும் தந்தை குவனெல்லாவும்............................ | 45 |
| வாழ்வில் மிகவும் கைவிடப்பட்டவர்களுக்கு முதலிடம் ...... | 50 |

For information:

**St. Mary of Divine Providence Illam,**
Don Guanella Road, Nehru Nagar-1,
Cuddalore-607001.
Tel. 04142/ 296622, Cell: 9659243262 .
E- Mail: daughtersofstmary@yahoo.co.in

**St. Joseph Seminary**
Samupillai Nagar, Cuddalore-607001
Tel. 04142-296788
E-Mail: sjcseminary@yahoo.co.in